
"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி - 2019



ISSN 2055-6516

விகாரி
வருடப்பிறப்பு
வாழ்த்துக்கள்

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# RUBY'S

CATERING

21

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு







திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்

அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா







ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton | THISTLE HOTEL | Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற

தரம் மிகு இலங்கை மற்றும்

தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

# கலசம்
# KALASAM

மணி 27 ஒலி 93

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE



கலசம் நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
வை சிவனருட் செல்வர்
சி அற்புதானந்தன்

விநியோகம்
சோ நிரஞ்சன்

விளம்பரம் தொடர்புகள்
மா இந்துசேகரன்

நிருவாகம்
வ இ இராமநாதன்

வெளியீடு
சைவ முன்னேற்றச் சங்கம்



முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com


# சிவாசாரியர்கள்தான் வழிகாட்டவேண்டும்

நவீன உலகில் மக்கள் நாகரிகமாக வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தங்கள் வாழ்க்கையில் எல்லாமே விரைவாக நடக்கவேண்டும் என்றொரு ஏக்கம் இருக்கிறது. வேகமாக முன்னேறவேண்டும்; வேகமாகப் பணம் சம்பாதிக்கவேண்டும்; வேகமாக வெற்றியடைய வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோள். கோயில்களுக்குச் சென்று வழிபடும்போதும் இந்த வேகமே முன்னிற்கிறது. இளைஞர், வயதானவர் என்ற பேதம் இன்றி அனைவரும் முண்டியடித்துக்கொண்டு வழிபாடு செய்வதும், முண்டியடித்துக்கொண்டு பிரசாதம் வாங்கி உண்பதும் அன்றாடம் திருக்கோயில்களிலே காணும் காட்சிகளாக இருக்கின்றன. திருமணச் சடங்குகளிலும் முக்கியமான கிரியைகளைச் சுருக்கிவிட்டு, ஆடம்பரங்களிலேயும் அவசியமற்ற விடயங்களிலும் அதிக கவனம் செலுத்துகிறார்கள்; அதிகப்பணம் செலவுசெய்கிறார்கள்.

இவர்களிற் பலர் ஆலய வழிபாட்டின் விதிமுறைகள், திருமணச் சடங்கு விதிமுறைகள், மரணச்சடங்கு விதிமுறைகள் என எதுவுமே தெரியாத நிலையில் இருக்கிறார்கள். இந்தக் கிரியைகள் தேவையற்றவை என்றொரு கருத்தும் சிலரிடையே உள்ளது. சில விதிமுறைகள் தற்கால வாழ்க்கைக்குப் பொருத்தமற்றவை அல்லது மாற்றவேண்டியவை என்று சொல்பவரும் உளர். வழிபாட்டு முறைகள், சடங்குகள் பற்றி அறியவோ, புத்தகங்களிற் கற்கவோ இவர்களுக்கு நேரமில்லை. இவற்றை விவரமாக விளக்கியுள்ள புத்தகங்களும் கிடைப்பது அரிது. யாரிடமாவது கேட்டிறியலாம் என்று சிலர் இருக்கிறார்கள். பழைய காலம்போல விவரங்களை எடுத்துச் சொல்ல வீட்டில் அநுபவமுள்ள வயதானவர்களும் இல்லை. புலம்பெயர்ந்த நாட்டில் மட்டும் இது ஒரு பிரசினையன்று; தாய்நாட்டிலும் நகர்ப்புறங்களில் இதே நிலைதான்.

இந்தச் சூழலில் பலர் கோயிலிலுள்ள சிவாசாரியர்களை நாடுகிறார்கள். சிவாசாரியர்களுக்கு இவைபற்றித் தெரியும் என்றும் சரியான தகவல் தருவார்கள் என்றும் அவர்கள் நம்புவதுதான் காரணம். எனவே வெவ்வேறு விதமான பதில்களை அளித்து அவர்களின் நம்பிக்கையைத் தகர்க்காமல், கோயில்களிலுள்ள சிவாசாரியர்கள், மக்கள் தவறு செய்யும்போது, அதைச் சுட்டிக்காட்டி மக்களைத் திருத்துவதுடன், சரியாகவும் பொறுப்பாகவும் பதிலளித்து மக்களின் ஏக்கத்தையும் போக்கவேண்டும். அது அவர்களின் பொறுப்பு மட்டுமன்று; கடமையுங்கூட.

**க ஜெகதீஸ்வரன், ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| செம்மையினார் | 03 |
| திருவாசகத்தின் காப்புச் செய்யுள் | 07 |
| திருவெண்ணெய் நல்லூர் - பயணக் கட்டுரை | 11 |
| புரந்தார் கண்ணீர் மல்கச் சாக்காடு- கந்தபுராணச் சிந்தனைகள் | 15 |
| ஆனைக்கும் அடிசறுக்கும் | 17 |
| ஆலயங்களும் அர்ச்சகர்களும் | 31 |
| இறைவனை ஏசலாமா? | 33 |
| சங்கத்தமிழ்ப் புலவர்களின் கோயில் பற்றிய உணர்வுகள் | 35 |
| The well - turtle and the sea - turtle | 37 |
| கண்ணனும் தாத்தாவும் | 38 |
| Hinduism in search of Answers | 43 |
| திருக்குறட் கதைகள் | 47 |


**அட்டைப்படம்: நிரஞ்சன்**

# செம்மையினார்

வித்துவான் க வேந்தனார்

இறைவன் அடியார்க்கு என்றும் இனியவர். அவர்களால் அறிதற்கு மிக எளிமையானவர். நண்ணினர்க்கு நல்லவன், "நண்ணினர்க்கினியனாய்" என்று அன்பர்கள் இறைவனை அழைப்பார்கள். இறைவன் அருளினால் தாம் அடைகின்ற உலக இன்பங்களில் மூழ்கி இறைவனையே மறந்து வாழ்கின்றவர்களையும், இறைவன் மறக்கமாட்டார். அவர்களைத் தமது இன்னருளால் ஈடேற்றி உய்யக்கொள்ளும் வெள்ளக்கருணை மிக்கவர். திருமாலும் நான்முகனும் தமக்கு இறைவன் அருளிய பதவிகளில் மூழ்கி இறைவனை மறந்துவிட்டார்கள். தனித்தனி தம்மையே முழுமுதலாக எண்ணித் தருக்குற்றார்கள். திருமால் உலகைக் காக்கின்ற நானே முழுமுதலாவேன் என்றான். நான்முகன் உலகைப் படைக்கின்ற நானே முழுமுதல் என்றான். இருவர்க்கும் போர் மூண்டது. முழுமுதற் கடவுளாகிய சிவன், அவர்களின் அறியாமையைக் கண்டு திருவுள்ளம் இரங்கினார். இருவர்க்குமிடையில் தீப்பிழம்பாய்த் தோன்றி அவர்களின் அறியாமையை அகற்றி ஆட்கொள்ள எண்ணினார். அவர்கள் தீப்பிழம்பின் அடியையும் முடியையும் அறியமுடியாதவர்களாய் அல்லற்பட்டார்கள். அல்லற்பட்டபின் மூவர்கோனாய் நின்ற சிவனே முழுமுதற் கடவுளென்னும் உண்மையை உணர்ந்தார்கள்.

"மாலும் அயனும் வணங்கி நேட
மற்றவர்க்கு எரியாகி நீண்ட சீலம்"

என்று திருஞானசம்பந்தர் இறைவனின் செயலைப் போற்றுகின்றார்.

**சீலம்:**

மாலும் அயனும் கொண்ட மயக்கத்தைப் போக்கி ஆட்கொள்ளுதற்காகவே இறைவன் நெருப்பு மலையாய் நின்றான். திருமாலும் நான்முகனும் கண்டுதொழும்வண்ணம் மிக எளிதாய ஒளி வடிவை இறைவன் எடுத்துவந்த அருட்செயலைச் 'சீலம்' எனத் திருஞானசம்பந்தர் சொல்லித் துதிக்கின்றார். சீலம் - எளிமை. ஒருரும் ஒருருவும் இல்லாத முழுமுதற் சிவம் ஒளியுருவாய்க் காட்சிகொடுத்து மாலையும் அயனையும் உய்யக்கொண்ட சீலத்தை எண்ண எண்ணத் திருஞானசம்பந்தரின் சிந்தை செழிக்கின்றது.

**வெளிவந்த மாலயனுங் காண்டரிய வித்தகனைத்**
**தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்**
**எளிவந்து இருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்**
**ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ**
**அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய்**
எனவரும் திருவாசகத்தினை நோக்குக

**சீலம் அறிவரிதாகி நின்ற:**

இங்ஙனம் முழுமுதற் சிவமாகிய இறைவன் அடியார்களை ஆட்கொண்டருளும் வண்ணம் எளியனாய் வெளிவந்து நிற்கும் சீலம் எம்மால் அறியமுடியாததாய் இருக்கின்றது. அவனருளே கண்ணாகக் காணவல்ல மெய்யடியார்களுக்கே இச் சீலம் தெரியக்கூடியதாகும்.

**“ஊனே புகுந்த உனையுணர்ந்தே**
**உருகிப் பெருகும் உள்ளத்தைக்**
**கோனே அருளுங் காலந்தான்**
**கொடியேற்கு என்றோ கூடுவதே”**

என்பது திருவாசகம். இறைவன் எளிவந்து அருளுங்காரணத்தை, அவனருளால் உணர்ந்துகொள்ளலாமேயன்றி, உரைப்பார் உரைக்கும் உரைகளால் உணரமுடியாதென்பதாம். ஆருயிர்கள் தம் தன்மைகெட்டுச் சிவத்தன்மையுற்ற தூய நிலையிலேதான், அருளின் செயல்களை அறிய வல்லனவாகும். தம் தன்மை கெடாமல் நின்று தாம் கற்ற நூலறிவினால் இறைவனின் இயல்புகளையும் இன்னருள் வகையையும் உணரா. உணர்ந்தார்க்கு உணர்வரியோன் என்பது திருக்கோவையார்.

**செம்மையினார்:**

உணர்ந்தார்க்கு உணர்வரியோனாய், தம் தன்மைகெட்டு நிற்கும் ஆருயிர்களால் உணரக் கூடியவனாய், உள்ளத்தின் உள்ளே நிற்கும் கருவாய் விளங்குகின்ற இறைவன் மிகச் செம்மையானவர். சிறப்பென்னும் செம்பொருளாய் உள்ளவர். இச்செம்பொருளைச் **“செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே”** என்று மணிவாசகர் ஆராக் காதலுடன் அழைக்கின்றார். சிவம், செம்பொருள் என்பன ஒருபொருட்சொற்கள். இந்தச் செம்பொருள்தான், தன் தன்மை எய்திய ஆருயிர்கட்குச் சிறப்பென்னும் வீட்டின்பத் தை ஈந்தருளும் மெய்பொருளாகும்.

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்ப தறிவு**

எனவரும் திருக்குறள் உரையில் “தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றுங் கலத்தல் இன்மையின், தூய்தாய், தாம் எல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள், விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல் பற்றி அதனை, செம்பொருள் என்றார்” எனக்கூறும் விளக்கத்தை நோக்குக. இறைவன் ஆருயிர்களுடன் அத்துவிதமாய்க் கலந்து நின்றாலும் தன்தூய தன்மையில் திரியான் என்பதை உணர்த்தச் செம்மையினார் என்றார். இங்ஙனம் செம்மை வாய்ந்த செம்பொருள் எழுந்தருளியிருக்கும் பசுபதியீச்சரத்திலே நிகழ்ந்த செயலொன்று சம்பந்தரின் சிந்தையைத் தொட்டுவிட்டது. சிவனையே சிந்திக்கும் திருப்பெருகும் தம் தூய சிந்தனையைத் தொட்ட செயலைத் திருநெறிய தீந்தமிழாற் பாடிப் பரவுகின்றார்.

**கோலவிழா:**

பசுபதியீச்சரத்தில் அருள் அழகு நிழலாடும் திருவிழா நிகழ்கின்றது. அந்தத் திருவிழா அடியார்களின் அன்புள்ளத்தை ஈர்த்தீர்த்து ஆனந்தம் அளிக்கும் அருள் ஆடல்களும் பாடல்களும் நிரம்பியது என்பதை உணர்த்தக் கோலவிழா என்றார். கோலவிழா நிகழும் பசுபதியீச்சரத்தில் கொடிபோல இடையையுடைய இளம் நங்கையர்கள், தமது அன்புத் தலைவர்களாகிய இளம் நம்பியர்களுடன் வந்து வழிபடுவார்கள். வழிபாட்டினால் முதிர்ந்த பத்திவீறு, அவர்களை அரங்கிலே ஏறி ஆடல் புரியும்வண்ணம் ஏவிவிட்டது. நங்கையரும் நம்பியரும் கோலவிழாவில் அரங்கேறி ஆடல் புரிந்தார்கள். உலக வாழ்வின் இன்பச் செவ்வியிலே ஊறித் தோய்ந்த இன்ப நுகர்வை மறந்து இறைவனடி பரவும் இறவாத இன்பக் காதலராய்ச் சிறந்து, ஆடல் புரியும்

அவர்களின் தூய பத்தி, சம்பந்தரின் திருவுள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. நங்கையர்கள் கொடியிடை உடையவர்கள். மிகமிக இளமைப் பருவத்தினர். தமது அன்புத் தலைவர்களுடன் ஆடல் புரியும் அரங்கில் ஏறி நாணம் இன்றி ஆடுகின்றனர். பசுபதியீச்சரத்தில் எழுந்தருளிய ஈசன்மேற் கொண்ட ஆராக் காதலன்பினால் தம்மை மறந்து, தம் நாமங்கெட்டு ஆடுகின்றார்கள். ஆடும்பொழுது, பால்போன்ற மொழிகளால் பசுபதியீச்சரத்தானைப் பாடியவண்ணம் ஆடுகின்றார்கள். நங்கையரும் நம்பியரும் பசுபதியீச்சரத்தானைக் காதலிக்கும் நங்கையர்களாக மாறிவிட்டார்கள். இச் செயலைக்கண்ட சம்பந்தரும் தம்மை மறந்துவிட்டார்.

**"கோல விழாவின் அரங்கேறிக்**
**கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்**
**பாலென வேமொழிந்து ஏத்தும் ஆவூர்ப்**
**பசுபதி யீச்சரம் பாடுநாவே"**

என்று பாடுகிறார்.

**அரங்கேறி:**

கொடியிடை நங்கையர் தம்மை மறந்த பத்தி நிலையில் அரங்கேறி நடிக்கின்றார்கள். ஆண்டவனிடத்தில் தம்மை ஒப்புவித்துவிட்டார்கள். இளமை எழிலும் இன்பச் செவ்வியும் கனிந்த பருவத்தில் பல்லாயிரம்பேர் கூடிநிற்கும் கோலவிழாவில் அரங்கேறிப் பசுபதியீச்சரநாதனைப் பரவி ஆடுகின்ற அற்புதக் காட்சியைச் சம்பந்தர் அப்படியே எமது அகக்கண்ணில் பதிக்கிறார்.

**கொடியிடை மாதர்கள்:**

ஆடுகின்ற மங்கையரின் இடையின் எழிலை ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் பாடுகின்றார். கொடியிடை மாதர்கள் எனக்கூறி மகிழ்கின்றார். இறைவனை எண்ணி, வளைந்து, நெளிந்து, துவண்டு ஆடுகின்ற இடையைப் பாடுகின்ற இன்பத்தை இறைவனைப் பாடும் இன்பத்தினும் பெரிதாகச் சம்பந்தர் மதிக்கிறார். மாதர்கள் அழகை உடையவர்கள். இறைவனுக்கே தமது அழகை அளித்து ஆடுகிறார்கள். அழகை அழியாத அழகாகப் படைத்துவிட்டார்கள். ஆடிய மங்கையரின் அழகு சம்பந்தரின் பாடலை அழகுபடுத்தித் தானும் அழியாமல் வாழ்கின்றது.

**மைந்தரோடும்:**

மாதர்கள் தமது காதல் தலைவர்களாகிய மைந்தரோடும் கூடிநின்று இறைவனை ஏத்தி ஆடுகின்றார்கள். தமது வாழ்க்கைத் துணைவராகிய உலகியல் தலைவரினும் மேலான உயிர்த்தலைவனை - ஆன்மநாயகனை அம்மாதர்கள் கண்டுவிட்டார்கள். அவன் கருணையிற் படிந்துவிட்டார்கள். தாமும் தமது காதலரும் ஆருயிர்கள் என்பதையும், பசுபதியீச்சர நாதனே பேரின்பக் கூடலைத் தமக்கு அளித்தருளும் ஆண்டவன் என்பதையும் அவர்கள் அறிந்துவிட்டார்கள்.

**பாலெனவே மொழிந்து ஏத்தும்:**

பால்போன்ற மொழிகளால் பசுபதியீச்சரத்தானைப் பரவிப் பணிந்து பாடுகின்றார்கள். இளமை மாறாத இனித்த சுவை மொழிகளால் இறைவனைப் பாடுகின்ற பேற்றை அம்மங்கையர்கள் பெற்றுவிட்டார்கள். கீதமினிய குயிலைப்போலக் கோலவிழாவின் அரங்கேறி ஆடுகின்ற

கொடியிடை மாதர்கள் பாடுகின்றார்கள். பாட்டின் இனிமை யாழ்முரி பாடிய சம்பந்தரின் அருள் உள்ளத்தை அள்ளிவிட்டது. பால் எனவே மொழிந்து ஏத்தும் என ஆவலன்பு கனிய ஆவியுருகிப் பாடுகின்றார். இறைவனும் பண்ணினேர் மொழியாளுமை பங்கன். பாலனெவே மொழிந்தேத்தும் பாடலைக் கேட்டு மகிழ்பூப்பார்.

பசுபதியீச்சரம் பாடுநாவே:

பாலெனவே மொழிந்து மாதர்கள் பாடி ஏத்திய பசுபதியீச்சரத்தைப் பாடிப் பாடிப் பரவும் வண்ணம் நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் தமது நாவுக்கும் ஆணையிடுகிறார். கன்னிமை கனிந்த கட்டிளமைப் பருவத்திலே பசுபதியீச்சரத்தானைத் தமது காதல் மிக்க தலைவருடன் ஆடிப்பாடி அன்பு செய்த கொடியிடை மாதரைச் சம்பந்தரால் மறக்கவே முடியவில்லை. அம்மாதர்கள் பாடியதுபோலப் பாடும்படி நம் நாவுக்குச் சொல்லி நயக்கிறார்.

மாலும் அயனும் வணங்கி நேட
மற்றவ ருக்கெரி யாகி நீண்ட
சீலம் அறிவரி தாகி நின்ற
செம்மையி னாரவர் சேரும் ஊராம்
கோல விழாவின் அரங்கேறிக்
கொடியிடை மாதர்கள் மைந்த ரோடும்
பாலென வேமொழிந் தேத்து மாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடு நாவே

நேட - தேட, சீலம் - எளிமை, செம்மையினார் - செம்பொருளாய் உள்ளவர், கோலம் - அழகு, மைந்தர் - வீரம் மிக்க ஆடவர்

## என்ன வரம் வேண்டும்?

மாணிக்கவாசகரிடம் என்ன வரம் வேண்டும் என்று இறைவன் கேட்கிறார். அதற்கு மணிவாசகரின் பதில்:
எனக்கு என்ன தரவேண்டும் என்று உனக்குத் தெரியும். எனக்கு எவ்வளவு தரவேண்டும் என்றும் உனக்குத்தெரியும். எனக்கு ஏதாவது வேண்டும் என்று நான் நினைத்தால், அதுவம் உன் விருப்பமே!

வேண்டத் தக்கது அறிவோய் நீ!
வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ!
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே

# திருவாசகத்தின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் சிவபுராணமே!

மு க மாசிலாமணி

*திருவாசகத்தின் காப்புச் செய்யுள் அல்லது கடவுள்வாழ்த்துச் செய்யுள் மணிவாசகராற் பாடப்பட்ட "நமச்சிவாய வாஅழ்க! நாதன் தாள் வாழ்க!" என ஆரம்பிக்கும் முதற் பதிகமான சிவபுராணமே! திருவாசகத்தின் சிறப்புப்பற்றி அதைக் கற்றுணர்ந்த பிற்காலப் புலவர்களாற் பாடப்பட்ட பாடல்களில் ஒன்றான "தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி" என்ற வெண்பா அன்று என்பதுபற்றிய சிறு விளக்கமே இக் கட்டுரை....*

செய்யுள் நடையில் நூல்களைப் பாடும் இலக்கியமரபு பெருவழக்காவிருந்த மிகமுற்பட்ட காலங்களில் புதிதாக **நூலொன்றைப் பாடும்போது தான் பாடும் நூல் எவ்விதக் குறையுமின்றிச் சிறப்பாக அமையவேண்டுமெனத் தனது வழிபடு தெய்வத்தை வேண்டிக் கடவுள் வாழ்த்து, அதாவது காப்புச் செய்யுள் பாடியே தனது ஆக்கத்தைத் தொடர்ந்து பாடுவதனையே பல புலவர்கள் வழமையாகக் கொண்டிருந்தனர்**. அவ்வாறு கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிக்கும் மிகப் பழைய நூல்களில் புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு சிவனையும், குறுந்தொகை முருகனையும், நற்றிணை திருமாலையும் வாழ்த்திப்பாடும் காப்புச் செய்யுள்களுடன் பாடப்பட்டுள்ள சங்க இலக்கியங்கள் ஆகும். சைவஞ் சார்ந்த மிகப் பழைய நூல்களில் பன்னிரு திருமுறைகளில் பத்தாந் திருமுறையாகவும் தமிழில் பாடப்பட்ட முதல் ஆகம நூலாகவும் சைவசித்தாந்த நூலாகவும் விளங்கும் திருமந்திரத்தின் ஆசிரியர் திருமூலர்,

**ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே**

எனக் கணபதிக்குக் காப்புச் செய்யுள் பாடிய பின்பே தொடர்ந்து மூவாயிரம் - 3000 - தமிழ் மந்திரங்களைப் பாடியுள்ளார். திருமந்திரம் போன்றே பெரியபுராணமும், இறைவனே "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்க,

***"உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்***
***நிலவு லாவிய நீர்மலி வேணியன்***
***அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்***
***மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"***

எனத் தில்லையுள் மாநடஞ் செய்யும் தில்லையம்பலக் கூத்தனுக்கு வணக்கச் செய்யுள் பாடியே சேக்கிழார் சைவத்தமிழ்ப் பெருங்காப்பியத்தைப் பாடியுள்ளார். இவைபோன்றே கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, அபிராமியந்தாதி எனச் சைவம் சார்ந்த பல நூல்கள் கடவுளை வாழ்த்தும் காப்புச் செய்யுட்களுடனேயே பாடப்பட்டுள்ளன. ஆகவே மேற்குறிப்பிட்ட நூல்களை **ஓதும்போது, அல்லது புராணபடனம் செய்யும்போது அந்நூல்களைப் பாடிய புலவர்களினாற் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப்பாடல்களை ஓதியபின் அல்லது அப்பாடலுக்கு உரை கூறிய பின்பே தொடர்ந்து நூலிலுள்ள பாடல்களை ஓதுவதும் உரைகூறுவதும், பின் நூலை நிறைவு செய்யும்போதும் கடவுள் வாழ்த்துப் பாடலுடனேயே நிறைவும் செய்யவேண்டும்**. அதுவே பொருத்தமானதும் ஒழுங்கான நடைமுறையுமாகும்.

தமிழிலுள்ள மிகச்சிறந்த நூல்களெனப் போற்றப்படும் **திருக்குறள், திருவாசகம், திருப்புகழ் போன்ற நூல்கள் மேலே கூறப்பட்ட நூல்கள் போல் காப்புச் செய்யுள் எனத் தனிப்பாடல் இல்லாதவை.** நூலின் ஆரம்பமே கடவுள் வாழ்த்தாக அமையும்வண்ணம் அவை பாடப்பட்டுள்ளன. உதாரணமாக 133 அதிகாரங்களைக் கொண்ட திருக்குறளில் முதலாம் அதிகாரம் "கடவுள் வாழ்த்து" என்றே நூல் ஆரம்பிக்கின்றது. திருக்குறளின் தொடக்கப் பாடலான,

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

என்ற குறள் திருக்குறள் நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் என்பதுடன் 1330 குறட்பாக்களைக் கொண்ட அந்நூலின் முதற் பாடலுமாகும்.

முருகன் புகழ் பாடும் திருப்புகழிலும்

**"கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி**
**கப்பிய கரிமுகன் அடிபேணி"**

எனக் கணபதி வணக்கத்துடன் ஆரம்பித்துத் திருப்புகழின் அநேகமான பாடல்கள்போல் "பெருமாளே" என முடிவுறும் முதலாவது திருப்புகழுமாகும்.

அதுபோலவே திருவாசகமும் அதன் பாயிரம்போல் அமையும் முதற் பதிகமான சிவபுராணத்தில் முதல் பதினைந்து அடிகளிலும்,

**"நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!**
**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!"**

எனத் திருவைந்தெழுத்தையும் சிவனின் திருவடிகளையும் வாழ்த்தித் தொடர்ந்தும் "தாள், அடி, கழல்" எனப் பதினாறு இடங்களில் ஒருபொருள் தரும் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களால் திருவடிகளைக் குறிப்பிட்டும், "வாழ்க, வெல்க, போற்றி" என அத்திருவடிகளை வாழ்த்தியும் வணங்கியும் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பித்துத் தொடர்ந்து 51 பதிகங்கள் 658 பாசுரங்களுடன் நிறைவுபெறுகின்றது. "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரி"யும் **ஒப்புயர்வற்றதொரு தெய்வீக ஞானப் பநுவலான திருவாசகத்தை ஓதும்போது அதன் கடவுள் வாழ்த்துச் செய்யுளாக அமையும் "நமச்சிவாய வாஅழ்க, நாதன் தாள் வாழ்க" என ஆரம்பிக்கும் சிவபுராணத்திலிருந்து தொடங்கி இறுதிப்பதிகமான அச்சோப்பதிகத்தின் இறுதிப் பாடலான "செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை" என்ற பாடலுடன் நிறைவு செய்யவேண்டும்.** அவ்வாறு, திருவாசம் பாடிய மணிவாசகரினால் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடலுடன் திருவாசகம் ஓதுவதனை விடுத்து, திருவாசகத்தைக் கற்றநுபவித்து, அதனூடாகத் தாம் பெற்றுக்கொண்ட அநுபவ உணர்வுகளைப் பிற்காலப் புலவர் ஒருவர், திருவாசகத்தின் சிறப்பைப் போற்றிப்பாடிய,

**தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்**

என்ற **வெண்பாவொன்று திருவாசகம் பாடிய மணிவாசகரினால் பாடப்பட்ட கடவுள்வாழ்த்துச் செய்யுள் அல்லது காப்புச் செய்யுள் போலத் திருவாசகம் ஓதப்படும் இடங்களிலெல்லாம் பிரசித்தமான பாடலொன்றாக இடம்பிடித்துவிட்டது.** திருவாசகத்தைப்போலவே மேலே எடுத்துக்காட்டப்பட்ட திருக்குறள், திருப்புகழ் போன்ற மேன்மைமிகு நூல்களையும் மனம் ஒன்றிக் கற்றநுபவித்த பிற்காலப் புலவர்கள் தமது அநுபவ உணர்வுகளை அந்நூல்களின் சிறப்பை விதந்து பாடிய பாடல்கள் பல அந்நூல்களின் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. உலகப் பொதுமறை என்று விதந்து போற்றப்படும் திருக்குறளின் சிறப்புப்பற்றி நக்கீரர், ஔவையார்

போன்ற தெய்வீகப் புலவர்கள் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்ட பிற்காலப் பெரும்புலவர்கள் பாடிய பாடல்கள் ***"திருவள்ளுவமாலை"*** எனத் தொகுத்து திருக்குறளின் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளன. இதுபோலவே திருப்புகழின் சிறப்புப்பற்றிப் பிற்காலப் புலவர்களால் பாடப்பட்ட பாடல்கள் திருப்புகழின் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. **திருக்குறளை அல்லது திருப்புகழை ஓதும்போது அந்நூல்களின் சிறப்பை விளக்கும் பிற்காலப் புலவர்களாற் பாடப்பட்ட பாடல்களை யாரும் பாடுவதில்லை. திருவள்ளுவர் இயற்றிய திருக்குறட் பாக்களையும் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாக்களையுமே பாடுகின்றனர். ஆனால், திருவாசகத்தை ஓதும்போது மட்டும் மணிவாசகராற் பாடப்படாததும் திருவாசகத்தின் சிறப்புப்பற்றி பிற்காலத்தில் பாடப்பட்டதுமான மேலே எடுத்துக்காட்டப்பட்ட வெண்பாவைக் காப்புச் செய்யுள் அல்லது கடவுள்வாழ்த்துச் செய்யுள்போல ஓதியே திருவாசகத்தை ஓத ஆரம்பிப்பதும் பின் அவ்வெண்பாவை ஓதியே திருவாசகம் ஓதுவதனை நிறைவு செய்வதும் வியப்பாக உள்ளது; இப்போது வழமை ஆகிவிட்டது.**

தமிழ்மொழிக்குக் கிடைத்துள்ள மிகமிக மேன்மையுடைய ஞானக் களஞ்சியமான திருவாசகத்தைக் கற்றநுபவித்த பிற்காலப் பெரும்புலவர்கள் பலர் அதன் சிறப்புப் பற்றிப் பாடிய பல பாடல்கள் திருவாசகப் பதிப்புக்களில் பின் இணைப்பாக இடம் பெற்றுள்ளன. திருவாசகத்தை மனம் ஒன்றிக் கற்றநுபவித்த இராமலிங்கவள்ளலார்,

**வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்**
**ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாமல் இனிப்பதுவே**

என மிகமிக உன்னதமான கவிதைகளே திருவாசமெனத் தான் பாடிய "திருவருட்பா" என்ற நூலில் "ஆளுடைய அடிகள் அருள்மாலை" என்ற பகுதியில் பத்துப்பாடல்கள் பாடியுள்ளார்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்பெரும் புலவரான சிவப்பிரகாச சுவாமிகள் தான் பாடிய "நால்வர் மணிமாலை"யில்

**விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்**
**காரண னுரையெனு மாரண மொழியோ**
**ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்**
**மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ**
**யாதோ சிறந்த தென்குவீ ராயின்**
**வேத மோதின் விழிநீர் பெருக்கி**
**நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலோம்**
**திருவா சகமிங் கொருகா லோதிற்**
**கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்**
**தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய**
**மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி**
**அன்ப ராகுநர் அன்றி**
**மன்பதை யுலகில் மற்றைய ரிலரே**

எனத் திருவாசகத்தை வேதத்துடன் ஒப்புநோக்கிப் படிப்பவர் மனதை உருக்குந் தன்மையில் வேதத்திலும் சிறந்தது திருவாசகம் எனப் பாடுகின்றார்.

இவ்வாறு திருவாசகத்தின் சிறப்புப்பற்றிப் பிற்காலப் புலவர்கள் பாடிய பல பாடல்கள் உள்ளன. அவைகளுள் ஒன்றே மேலே எடுத்துக்காட்டப்பட்டதும் திருவாசகம் ஓதுமுன்னர் காப்புச்

செய்யுள்போல அண்மைச் சிலகாலமாக ஓதப்படுவதுமான "தொல்லையிரும்பிறவி" என்ற வெண்பாவுமாகும். திருவாசகம் பற்றி உரை நிகழ்த்தும்போது அல்லது எழுதும்போது திருவாசகத்தின் சிறப்பை விவரமாக விளக்குவதற்குத் திருவாசகத் தேனைப் பருகி அநுபவித்த பிற்காலப் புலவர்கள் பாடிய மேலே குறிப்பிட்ட பாடல்களை மேற்கோள்களாக - quotations - எடுத்துக்காட்டப் பயன்படுத்தலாம்.

ஒரு நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் அல்லது காப்புச் செய்யுள் என்பது அந்நூலின் ஆசிரியரால் நூலினைப் பாடுமுன் தன் வழிபடுதெய்வத்தின் ஆசி வேண்டிப் பாடும் செய்யுளேயன்றி அந்நூலைக் கற்றுணர்ந்த பிற்காலப் புலவர்களால் அந்நூலின் சிறப்புப் பற்றிப் பாடப்பட்ட செய்யுளன்று என்பதனை, திருவாசகம் பாடிய **மணிவாசகரால் பாடப்படாத "தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி" என்ற வெண்பாவை முதலில் பாடித் தொடர்ந்து திருவாசகத்தை பத்திசிரத்தையுடன் ஓதுபவர்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துத் தெளியவேண்டும்.**

திருவாசகத்தின் பொருள் தில்லை நடராசனே என மணிவாசகராலேயே கூறப்பட்ட சிறப்புக்குரிய ஞான நூல் திருவாசகம் என்பதுடன் அதனை மணிவாசகர் சொல்ல, அந்தணர் வடிவிற் தோன்றிய சிவனால் எழுதப்பட்டதென்ற மிக மேன்மையுடைய ஒரு தெய்வீக நூலுமாகும். பாண்டியப் பேரரசின் தலைமை அமைச்சரான திருவாதவூரர், அரச கடமையினை நிறைவேற்றும்பொருட்டுச் சென்ற வேளையில், இறைவனே தேடிச்சென்று வழிமறித்து ஆட்கொண்டு, பின் அவர் மூலமாக மனுக்குலத்துக்கு மாண்புமிக்க தெய்வீக நூலொன்று கிடைக்கவேண்டுமென்ற பெருநோக்குடன் மணிவாசகரை விட்டுப் பிரிந்து செல்கிறார். அப்பிரிவினைத் தாங்கிக்கொள்ளமுடியாத மணிவாசகர் திருப்பெருந்துறையில் இறைவன் தன்னைத் தேடிவந்து ஆட்கொண்டபோது தான் பெற்றுக் கொண்ட ஆனந்தமான அந்த இறையநுபவம் நிலைத்திருக்கவில்லையே என்ற ஏக்கத்தில் மீண்டும் இறைவனை அடையவேண்டுமென்ற பேராதங்கத்துடன் ஆன்ம யாத்திரை மேற்கொண்டு சிவனோடு நேரில் உரையாடுவதுபோல அழுதழுது உருகியுருகிப் பாடியதும் இறையநுபவத்தின் பிழிவாகக் கிடைத்திருப்பதுமான அந்த மேன்மைமிகு ஞானநூலை ஓதும்போது மணிவாசகர் தான் யாரை அடையவேண்டுமெனத் திருவாசகம் முழுவதும் எடுத்தோதினரோ அவரின் திருவடிகளையே "வாழ்க, வெல்க, போற்றி" என மீண்டும் மீண்டும் உரக்கக் கூறி வணங்கி வாழ்த்திப் பாடியுள்ளதுடன், தொடர்ந்தும்,

**"சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்**
**சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை**
**முந்தை வினைமுழுதும் ஓயத்"**

தான் சிவ வணக்கத்துடனேயே சிவபுராணத்தை உரைத்துள்ளதாக மணிவாசகரே சிவபுராணத்தில் வெளிப்படையாகப் பொருள்விளங்கும்படி - clarity in meaning - அழுத்திக் கூறியுள்ளதற்கமைய நாமும் **"திருச்சிற்றம்பலம்" - நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க, இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என மணிவாசகர் ஓதிய கடவுள்வாழ்த்துடன் திருவாசகத்தை ஓத ஆரம்பிப்பதும், பின்பு நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க, திருச்சிற்றம்பலம் என ஓதி நிறைவுசெய்வதுமே மிகமிகப் பொருத்தமானதும் சரியானதுமான நடைமுறையுமாகும். மனங்கரைத்து மலங்கெடுப்பதும் மணிவாசகர் சொல்ல இறைவனாலேயே எழுதப்பட்டதுமான அதிசிறப்புக்குரிய திருவாசகத்தை ஓதும்போது மணிவாசகர் அருளிய ஒழுங்கிலோதி ஆன்ம இன்பம் பெறுவோமாக.**

******

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே

"திருவெண்ணெய் நல்லூரருட் டுறையுள் அத்தா" என்ற சுந்தரரின் இவ்வாக்கால், திருவெண்ணெய் நல்லூர் ஊரின்பெயராகவும் திருவருட்டுறை கோயிலின் திருநாமமாகவும் வழங்குகின்றன என்பது விளங்குகின்றது. ஆனால் கிருபாபுரீசுவரர் என்ற ஈசுவரரின் பெயரால் இப்போது குறிப்பிடப்படுகிறது.

**கோயிலின் பெருமை:**

சுந்தரர் இறையருள் பெற்று "பித்தா" என்று விழித்து முதற்தேவாரம் பாடிய தலம். "வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக" என்று கேட்டவருக்கு "என் இருப்பிடம் இதுவே" என்று இறைவன் காட்டிய பதி. சைவ சித்தாந்த சாத்திரங்களுள் தலையானதாகத் திகழும் சிவஞான போதம் நூலை அருளிச்செய்த மெய்கண்டார் பிறந்து, வாழ்ந்து, உபதேசம் பெற்ற சிறப்புத் தலம். முருகப் பெருமான் தனது மயிலோடு நடனக்காட்சியை அருணகிரிநாதருக்குக் காட்டிய தலம். தருமர், பாஞ்சாலியின் தனிமையில் அருச்சுனன் தலையீடு செய்ததற்கான தண்டனையை நிவர்த்தி செய்த தலம்.

# திருவெண்ணெய் நல்லூர்
## பயணக் கட்டுரை
### சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

"அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் உடையான்" என்றும், தருமதேவன் என்றும் புகழ்பெற்ற சடையப்ப வள்ளலின் இடமுமாகும். கம்பர் இராமாயணத்தில் இக்கோயிலைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சடையப்ப வள்ளலின் இல்லம் வடக்கு வீதியில் இருந்ததாகக் கூறப்படுகிறது. சுந்தரர் தவிர, அப்பர், மெய்கண்டார், அருணகிரிநாதர், வள்ளலார் ஆகியோரும் இக்கோயிலைப் போற்றிப் பாடல்கள் அருளியுள்ளார்கள்.

***இறைவர்: கிருபாபுரீசுவரர், வேணுபுரீசுவரர், அருட்டுறைநாதர், தடுத்தாட்கொண்ட நாதர்***
***இறைவி: மங்களாம்பிகை, வேற்கண்ணியம்மை***
***தலவிருட்சம்: மூங்கில்***
***தீர்த்தம்: தண்டதீர்த்தம்***
***விநாயகர்: பொல்லாப்பிள்ளையார்***

**பயணம்:**

வழமைபோல, மனைவியாரோடு 08.08.2018 அன்று கார்மூலம் இத்தலத்துக்குச் சென்றேன். நாங்கள் திருவெண்ணெய் நல்லூருக்குச் செல்லவேண்டும் என்றுதான் சொன்னோம். எமக்கு அது கோயிலின் பெயரன்று, ஊரின் பெயரென்று தெரியாது. ஆனாலும் சாரதி கிருபாபுரீசுவரர் கோயிலுக்கு எங்களைக் கூட்டிச் சென்றார்.

**இறைவர் பெயர்:**

தாருகாவனத்திலுள்ள முனிவர்கள் மிகவும் ஆணவம் கொண்டு தற்பெருமையுடன் சிவனை அழிக்க யாகம் செய்தனர். அரன் அவர்களின் தீய செயலை மன்னித்து அநுக்கிரகம் - கிருபை கொடுத்ததால் கிருபாபுரீசுவரர் என்ற நாமம் ஏற்பட்டது.



பத்து ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள பெரிய கோயில் ஐந்து நிலைக் கோபுரத்துடன் காட்சி தருகிறது. ஐம்பொறி களாகிய கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவற்றை இது குறிக்கின்றது. இந்தக் கோபுரம் பத்தாம் நூற்றாண்டில் சோழர்களாற் தாபிக்கப்பட்டது. நான்கு மணிக்குத்தான் பூசை ஆரம்பம். நாங்கள் மூன்னதாகவே சென்றுவிட்டதால் பலமுறை கோயிலைச் சுற்றிப் பார்க்க அவகாசம் கிடைத்தது. முதலில் தண்டதீர்த்தம் என்னும் திருக்குளத்தைக் கண்டோம். புதிதாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டிருந்தது. அழகான அடுக்கடுக்காகப் படிகள் அமைக்கப்பட்டிருந்தன. நடுவில் ஒரு சிறு மண்டபம் காணப்பட்டது.

சரியாக நான்குமணிக்கு நடுத்தர வயதுடைய ஒரு சிவாசாரியார் வந்தார். இது புதுமையாக இருந்தது. கோயிலுள்ளே அச்சமயம் இரண்டு மூன்று பேர்தான் இருந்தனர். ஆலயத்தின் முதற் பிராகாரத்தில் விநாயகர், முருகன், அறுபத்துமூன்று நாயன்மார், சப்தமாதர், மகாவிஷ்ணு, அருணந்திசிவம், மெய்கண்டதேவர் ஆகியோரது சந்நிதிகள் உள்ளன. இதுதவிர, சிவன்கோயில்களிலே வழமையாகக் காணப்படுகின்ற இலிங்கோற்பவர், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, சண்டேசுவரர் சந்நிதிகளும் உள. நவக்கிரகங்கள் உரிய அமைப்பில் உள்ளன.

நாங்கள் வில்வமாலை கொடுத்து அர்ச்சனை செய்வித்தோம். சிவன் அழகான சுயம்பு இலிங்கமாய், கிழக்கு நோக்கியிருந்து அருள்பாலிக்கிறார். சிவாசாரியார் அவர்கள் எங்களுக்கு ஒரு சோடி பாதுகைகளைக் காட்டினார்கள். சுந்தரருடன் வாதிட்டுத் தடுத்தாட்கொண்டபின் மானுட உருவில் வந்த சிவன் மறையும்போது விட்டுச்சென்ற காலணி என்கிறார்கள்.


சிவாசாரியார் பின்னர் எம்மை அம்பாள் சந்நிதிக்கு அழைத்துச்சென்றார். அம்மனுக்குத் தனிக் கோயிலாக உள்ளது. சிவனுக்கு இடப்புறத்தில், கிழக்கு நோக்கி நின்றநிலையில் மலர்ந்த திருமுகத்தோடு அம்பாள் அருள்பாலிக்கிறார். சங்கநிதி, பதுமநிதி வாசலில் காவல் புரிகின்றனர். சிவன் முன்பு நஞ்சுண்டு மூர்ச்சையுற்று நினைவை இழந்தபோது, அம்பாள் வெண்ணெய் உருவாக்கி, பஞ்சாக்னி உண்டாக்கி இறைவனைக் காப்பாற்றினாராம். அதனால் இந்த இடத்துக்கு வெண்ணெய்நல்லூர் என்ற பெயர் வந்தது என்கிறார்கள்.

பூசையின் பின்னர் பிரசாதம் கிடைத்தது.

**பொல்லாப் பிள்ளையார்:**

மெய்கண்டதேவருக்கு அவரின் ஐந்தாவது வயதில் அறிவு புகட்டியவர். இவரை வணங்கினால். பேசாத பிள்ளை பேசும் என்ற நம்பிக்கையில் மக்கள் இவரை வழிபடுகிறார்கள். இதைவிட, தடைப்பட்ட விவாகம், பிள்ளைப்பேறு, உடல் நலம் யாவும் நிறைவேறும்.. "பொல்லா" என்றால் உளிகொண்டு செதுக்காத என்று பொருள்படும். இவர் சுயம்பு பிள்ளையார்.

**சுந்தரர் கோயில்:**



சுந்தரருக்கு இங்கே தனிக்கோயில் உள்ளது. அங்கே சுந்தரர் கையில் ஓலையுடன் காட்சியளிக்கிறார்.

பிரசாதம் தந்தபின் சிவாசாரியார், "அந்த மண்டபத்தைப் பாருங்கள்" என்றொரு மண்டபத்தைக் காட்டினார். சுந்தரரின் திருமணம் அங்கேதான் சிவனால் தடுக்கப்பட்டது. இதனால் இறைவனுக்குத் தடுத்தாட்கொண்ட நாதர் என்ற திருநாமமும் உள்ளது. மிக விசாலமான இம்மண்டபம் அழகிய வேலைப்பாடுகளோடு கண்ணைப் பறிக்கின்றது. அந்த மண்டபத்தில் இருந்து பிரசாதத்தை உண்டு மகிழ்ந்தோம். இம்மண்டபத்தைப் புனருத்தாரணம் செய்து மேன்மைப்படுத்தியவர் எமது ஈழத்தைச்சேர்ந்த, தற்போது இங்கிலாந்தில் வதியும் ஒரு வைத்தியகலாநிதி என்று அறிந்து மிகவும் பேரானந்தம் அடைந்தோம்.

நடுநாட்டுத் தலமாகிய இங்கு மெய்கண்டாரின் சமாதி வடக்குவீதியின் கோடியில் உள்ளது.
நடை திறப்பு:
*காலை 6 மணி - 12 மணி*
*மாலை 4 மணி - 8 மணி*

பள்ளியறை பூசை இரவு 8 மணி. ஒவ்வொரு காலப் பூசையின்போதும் சிவனுக்கும் அம்பாளுக்கும் அலங்காரம், நைவேத்தியம் தீபாராதனை நடைபெறும். நாள்தோறும் நான்குகாலப் பூசைகள் நடைபெறுகின்றன.
காலசந்தி 6 மணி உச்சிக்காலம் 11 மணி சாயரட்சை 7.45 மணி அர்த்தசாமம் 8 மணி

பங்குனி உத்தரம், ஆடிச் சுவாதி உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆடி உற்சவத்தில் திருமண உற்சவம், தடுத்தாட்கொண்டது, சுந்தரருக்குக் காட்சிகொடுத்தது ஆகிய வைபவங்கள் நடைபெறும். சுந்தரரின் உற்சவத் திருமேனி கண்டுதொழத்தக்கது.

பத்துநாள்கள் உற்சவம் பங்குனி சித்திரை மாதங்களில் நடைபெறும். கொடிமரத்தின் முன்னால் இருக்கும் நந்தியை தர்மராசன் எனப் பாவித்து, மக்கள், வினை தீர, திருமணத் தடை நீங்க, வாழ்வு வளம்பெற என்று வேண்டுவர். இது மிகமிகப் பிரசித்திபெற்ற நந்தியாகும்.

புகைவண்டி மார்க்கமாக விழுப்புரம் - திருசிராப்பள்ளி தடத்தில் சென்று திருவெண்ணெய் நல்லூர் புகைவண்டி நிலையத்தில் இறங்கி 7 கி மீ தூரத்திலுள்ள கோயிலைப் பேருந்து மூலம் அடையலாம். நகரப் பேருந்து வசதிகளும் தாராளமாக உள்ளன.

**காரூர்ப் புனல்லெய்திக் கரைகல்லித் திரைக்கையால்**
**பாரூர்புக ழெய்தித் திகழ் பன்மாமணி யுந்தித்**
**சீரார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்**
**ஆரூரனெம் பெருமாட்காண் அல்லேனென லாமே**

இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதி அடியில், முன்பே உனக்கு ஆளாகிய யான் இப்போது அதனை இல்லை என்று கூறுதல் பொருந்துமோ என்னும் பொருள்படுமாறு "அத்தா உனக்காளாய் இனி அல்லேனென லாமே" என்று பாடியுள்ளார்.

என்னை ஆளாக்கிய பிதாவும் ஆசிரியருமான என் அப்பா வீட்டில் எனக்குக் கற்பித்த முதல் தேவாரம் "பித்தா பிறைசூடி" என்ற தேவாரமே. நான் யாழ் மத்திய கல்லூரியிலேயே படித்தேன். கிறித்துவப் பாடசாலையானதால் யாழ் மத்தியகல்லூரியில் மருந்துக்கும் சைவசமயம் கிடையாது.

பல தலங்களைத் தரிசித்த யான் சென்ற ஆண்டுதான் இவ்வரிய தலத்துக்குச் செல்ல முடிந்தது. அதுவும் இறைவன் செயலே. மீண்டும் இந்தியா சென்றால், இக்கோயிலைத் தரிசிக்கவேண்டும் என்ற ஆவல் உள்ளது.

மாணிக்கவாசகர் பெருமான் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் (திருப்பெருந்துறை) ஆவுடையார் கோயில். அதுபோன்று சுந்தரரை இறைவன் ஆட்கொண்ட இடந்தான் திருவெண்ணெய் நல்லூர் என்னும் இத்தலம். **நாங்கள் பெரிய கோயில்களுக்குப் போய்ப் பணம் கொடுத்து வரிசையில் நிற்காமல், இத்தகைய சிறப்பான தலங்களுக்குச் சென்று தரிசிப்பது சிறப்பாகும் என்பது எனது தாழ்மையான கருத்து.**

"சொல் ஊரன் தன்னைத் தொழும்புகொளும் சீர்வெண்ணெய்
நல்லூர் அருட்துறையின் நற்பயனே" - அருட்பா

***உசாத்துணை: திருமுறைத் தலங்கள் இணையத்தளம்***

# புரந்தார் கண்ணீர் மல்கச் சாக்காடு

## கந்தபுராணச் சிந்தனைகள்

### கலாநிதி சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

**"புரந்தார் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"**

தம்மைக் காத்த தலைவனுடைய கண்கள் நீர் பெருக்குமாறு சாகப்பெற்றால், அச்சாவு இரந்தாவது பெற்றுக் கொள்ளத்தக்க பெருமையுடையது என்று வள்ளுவர் கூறினார். "தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்றால் அந்தக் குணம் தலைவனுக்கு விசுவாசமாக இருத்தலும், அவனுக்காக உயிரை விடுதலாகவும்தான் இருக்க வேண்டுமெனக் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்லா நிற்கின்றது.

அசுரப் படைகளிலே சூரனுக்கு அடுத்ததாகத் தலைசிறந்த வீரர்கள் சிங்கமுகாசுரனும், பானுகோபனுமே. இரண்டு பேருமே யுத்தத்திற்குப் போகும்போது அசுரகுலம் அழியப்போகிறது; தாம் அழியப்போகிறோம், என்பதை நன்கு உணர்ந்துகோண்டே போனார்கள். அவர்களுடைய யுத்தப் புறப்பாட்டையும் அவர்களிறந்தபோது அவர்களுக்காகச் சூரன் விட்ட கண்ணீரையும் பார்க்கும்போது அவர்களுடைய சாவின் புனிதம் மாத்திரமன்றி, அவர்களுடைய உயர்ந்த கலாசாரமும் தெளிவாகத் . தெரிகிறது.

பானுகோபன், சூரனுடைய மற்றைய புத்திரர்களும் அமைச்சர்களும் இறந்த பின்னர், சூரனைச் சந்தித்து, தேவர்களை சிறையைவிட்டுச் சமாதானம் செய்யும்படி சொல்கின்றான். சூரன் கேட்கவில்லை. "நீ பயந்து விட்டாய். நீ வீட்டிலேயே இரு. நான் போய் யுத்தம் செய்து வருகிறேன்" என்று சொல்கிறான். அதைக் கேட்ட பானுகோபன், "இவனுக்கு உய்யும் வழி இல்லைப்போலும். அதனாற்றான் நான் சொன்ன ஒன்றையும் ஏற்றுக் கொள்ளவில்லை. விதியை யாரே வென்றவர். இவனுடைய வினைக்கேற்ற செயலைச் செய்வேன்" என்று நினைத்துத் தன்னுடைய சொற்களுக்கு மன்னிப்புக் கோருகின்றான். மன்னிப்புக் கோரியபின் யுத்தத்திற்கு போக அனுமதி பெற்று யுத்த களம் செல்கின்றான். மிகவும் உக்கிரமாகப் போர்புரிந்து வீரவாகு தேவரின் கையினாலேயே மாண்டு போகின்றான். சூரன் அடைந்த துயரம் கொஞ்சமல்ல. கிட்டத்தட்ட 25 பாடல்கள் சூரன் பட்ட துன்பத்தை விவரிக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்று, தேவரான பகைவரைச் சிறை விடுத்தால் நமக்கு உயர் வாழ்வு உண்டாகும் என்று சொன்னாய். அதையும் இகழ்ந்து உன்னையும் தோற்றுவிட்டேன். அதனை எண்ணுவதால் இனி என்ன பயன்? தகுதி உடையவனே எவருக்காவது தன்னாலே வராத துன்பமுள்ளதோ இல்லையே?"

**சொன்னார் சிறையை விடின் உய்வுண்டாம் என்றுமுனஞ்
சொன்னாய் அதுவும் இகழ்ந்துன்னைத் தோற்றனனால்
என்னாம் இனியதனை எண்ணுவதி யாவருக்குந்
தன்னால் வராத வினையுளதோ தக்கோனே**

-பானுகோபன் வதைப் படலம் 166

பானுகோபனுடைய மரணம் எவ்வளவு சிறந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

யுத்தத்திற்கு புறப்படுவதற்கு முன்னர் சிங்கமுகாசுரன் சூரனைக் காண்கின்றான். "ஆதியும் அந்தமுமில்லாத இறைவனைச் சிறுவன் என்று எண்ணினாய். விளைவை நீ அறிந்து

கொள்ளவில்லை. என் சொல்லானது உனக்கு நஞ்சாக ஆயிற்றே. மேனாள் விதியை எவரே வெல்லும் தன்மையுடையவர்?" எவருமில்லையே!

**மூலமும் முடிவுமில் லாத மூர்த்தியைப்**
**பாலனென் றெண்ணினை படுவ தோர்ந்திலை**
**ஆலம தானதே ஐய என்மொழி**
**மேலையின் விதியையார் வெல்லும் நீரினார்**

-சிங்கமுகாசுரன் வதைப் படலம் 23

அணை கடந்து செல்லும் நீரைச் சிறை செய்வதில் என்ன பயன். இன்று நான் சென்று பகைவர் என்று வந்த கூட்டம் அனைத்தையும் துடைத்து விழுங்கி விடுகிறேன். கந்தன் என்று ஒருவனை வென்றுவிட்டால் உன்னை வந்து காண்பேன். இல்லையென்றால் எல்லோரும் அழிவது நிச்சயம் என்று சொல்லி விடைபெற்று யுத்தத்திற்கு போகிறான் சிங்கமுகாசுரன். கடும் போர் செய்கிறான். முருகப் பெருமானால் அழிக்கப்படுகிறான். சூரன் பட்ட துன்பத்திற்கு அளவே இல்லை. பன்னிரண்டு பாடல்கள் இதனை விவரிக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்று. "பொன்னையும், பொருளையும், பூமியையும், மைந்தரையும் இன்னும் மற்றவற்றையும் இழந்தாலும் மீண்டும் பெறலாம். என்னை உன் உரிமையாகக் கொண்ட என் தம்பியே உன்னை நான் இனி இப் பிறவியிலே அடைவது முடியுமா? சொல்வாயாக"

**பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்**
**பின்னை யுளபொருளை யெல்லாம் பெறலாகும்**
**என்னை யுடைய இளையோனே இப்பிறப்பில்**
**உன்னை யினிப்பெறுவ துண்டோ உரையாயே.**

-சிங்கமுகாசுரன் வதைப் படலம் 469

சூரன் பட்ட துன்பம் உண்மையிலேயே உள்ளாளமானது. இவ்வாறு புரந்தவர் கண்ணீர் மல்கச் செய்த பானுகோபனுடையதும் சிங்கமுகாசுரனுடையதுமான சாக்காடுகள் மிகவும் புனிதமானவையே. தம்மை நம்பியிருந்த சூரனுக்கு, தம்மாலான மிகப் பெரிய கொடையான உயிரைக் கொடுத்து, அந்த நம்பிக்கைக்குத் தாம் தகுதியானவர்களென இருவரும் நிருபித்தனர். இவ்வாறு இவ்வுலக வாழ்விற்கு முக்கியமான நம்பிக்கைக்குத் தகுதியான வாழ்க்கையை வாழ்வதற்கான ஒரு கலாசாரத்தைக் கந்தபுராணம், அழிந்த பல அசுரவீரர்கள் மூலம் விளக்கிக் காட்டுகிறது

## திருக்குறள் [கள்]

திருக்குறள் என்ற நூல் 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டது. இவ்வளவு குறள்கள் இருக்கும்போது திருக்குறள்கள் என்றுதானே சொல்லவேண்டும். ஏன் திருக்குறள் என்று சொல்கிறோம் என்று ஒருவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. எழுத்தாளர் சுஜாதாவிடம் சென்று இந்தக் கேள்வியைக் கேட்டார்.

அதற்குச் சுஜாதா, திருக்குறள் எப்போதுமே "கள்"ளை அநுமதிப்பதில்லை. அதனாலேயே அது திருக்குறளாக இருக்கிறது என்றாராம்!!

**Whats app இல் வந்தது!**

# ஆனைக்கும் அடி சறுக்கும்

க. உமாமகேசுவரன்

**போரிலே எதிரி எறிகின்ற அல்லது ஏவுகின்ற ஆயுதங்கள் தனக்கெதிரே வருகின்ற போது சுத்தவீரன் தன் கண்ணை இமைக்கக்கூடாது. போர் என்றதும் சினத்தோடு விழித்த விழிநோக்கை மாற்றவே கூடாது. அப்படி மாற்றிவிட்டால் - கண்ணை இமைத்துவிட்டால் - புறமுதுகிட்டு விட்டதாக அர்த்தம் என்று பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.**

மிகப்பழந்தமிழ் இலக்கியங்கள் எனப்படுபவை சங்க இலக்கியங்கள். கிடைத்திருக்கும் சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இருபெரும் பிரிவில் அடங்குகின்றன. எட்டுத்தொகையிலே வருவதொரு நூல் புறநானூறு. அங்கே ஔவை பாடிய பாடல் ஒன்று வருகிறது.

அரசன் போருக்குப் புறப்படுமுன் வீரர்களோடு விருந்துண்பான். மதுவும் வழங்கப்படும். **மது வழங்கப்படும்போது மிகச்சிறந்த வீரனுக்கே முதலில் வழங்கப்பட வேண்டும். "இவன் தான் முதலிலே மதுவைப்பெறும் தகுதி உள்ளவன்" என்று புலவர் ஒருவர் சிபாரிசு செய்ய வேண்டும்.** இத்தகையதொரு சந்தர்ப்பத்திலே சிபாரிசு செய்பவராக ஔவை அமைகிறார்.

"வேந்தே, கள்ளை முதலிலே இவனுக்குத் தான் வழங்க வேண்டும். நீ கூட அவன் உண்ட பின்புதான் உண்ண வேண்டும். ஏன் தெரியுமா? இவன் தந்தையின் தந்தை, நின் தந்தைக்கு எதிரே வந்த வேலைக் கண் இமைக்காது நின்று ஏற்று வீரமரணம் எய்திய பெரும் புகழாளன். அவன் பெயரனாகிய இவனும் பகைவர் உன்மீது எறியும் வேலைக் கண் இமைக்காது ஏற்பான் உன்னைக் காப்பான்."

**இவற்கீத் துண்மதி கள்ளே சினப்போர்**
**இனக்களிற் றியானை யியறேர்க் குரிசில்**
**நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை**
**எடுத்தெறி ஞாட்பி 1 னிமையான் ....**
**மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்....**
**மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே**

என்று தன் சிபாரிசுக்குரிய வீரனைத் தான் சிபாரிசு செய்வதற்கான காரணத்தை ஔவை கூறும் போது, கண் இமைக்காது படைக்கலங்களை எதிர்கொள்ளும் வீரம் ஒப்பற்ற வீரம் என்றும் அது பரம்பரை பரம்பரையாக வருவதோர் பண்பு என்றும் வலியுறுத்தத் தவறவில்லை. புறநானூறு இங்ஙனம் போற்றும் இவ்வீரப் பண்பைச் சுத்த வீருக்கான இலக்கணமாகவே ஆக்கிவிட்டது திருக்குறள்.

**விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்**
**ஓட்டன்றோ வன்க ணவர்க்கு**

எனப் படைச்செருக்கு என்னும் அதிகாரத்திலே வரும் குறளை, வேல் கொண்டெறிய விழித்தகண் அழித்திமைப்பின் வன்கணவர்க்கு ஓட்டன்றோ எனக் கொண்டு கூட்டினால் பொருள் காணல் எளிதாகிவிடும்.

**வேல்கொண்டு எறிய - (எதிரி) வேலால் எறிய, விழித்த கண் -(போர்புரியவெனச் சினத்தோடு) விழித்துப் பார்த்த கண்ணை, அழித்திமைப்பின் - (சினத்தோடு கூடியிருந்த முந்திய நோக்கை) மாற்றி இமைத்தால், வன்கணவர்க்கு - கொடியரான வீரருக்கு, ஓட்டன்றோ - (தாம்) புறமுதுகிட்டதாக ஆகிவிடுமன்றோ!**

திருக்குறள் கூறும் சுத்த வீரருக்கான இந்த இலக்கணத்தைப் பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்களிலே வரும் பாத்திரங்கள் இடையேயும் நாம் காணமுடிகிறது.

**வேலுங் கணையமும் வீழினும் இமையார்**
**வீரியத் தறுகணர்....**

**இகலிடை இமையா எரிமலர்த் தடங்கண்**
**புகழ்வரை மார்பன்.....**

என்றிவ்வாறு வரும் பெருங்கதைப் பாடற்பகுதிகளும்,

**ஆரமருள் ஆண்டகையும் அன்னவகை வீழும்**
**வீரரெறி வெம்படைகள் வீழ இமையான்....**

**ஏந்தல் தன் கண்கள் வெய்ய இமைத்திட எறிதல் ஓம்பி**
**நாந்தக உழவன் நாணி நக்குநீ அஞ்சல் கண்டாய்**
**காய்ந்திலேன்....**

என்றிவ்வாறுவரும் சீவகசிந்தாமணிப் பாடற்பகுதிகளும் அதற்கான சான்றாதாரங்களாய் மிளிர்கின்றன. ஆனால், கம்பராமாயண வீரர்களிடையே வீரர்க்கான இந்த இலக்கணம் பேணப்படவேயில்லை என்பது வியப்பாக உள்ளது.

**கவிச்சக்கரவர்த்தி கம்பன் இராமகாவியம் செய்த பெரும் கவிஞன். அந்த ஆனைக்கே அடி சறுக்கி விட்டதோ? என்ற ஐயம் எழுவதற்கு இடம் தந்துவிட்டான் அவன்.**

யுத்தகாண்டத்திலே இராமனும் கும்பகருணனும் எதிர்கிறார்கள்; ஒருவரை ஒருவர் எதிர்க்கிறார்கள். கொடியதொரு போர் ஆரம்பமாகி விட்டது. கும்பகருணனின் படை முழுமையாக அழிந்து விட்டது. அவன் தனி ஒருவனாய் நிற்கிறான். ஒரு சந்தர்ப்பத்தில் இராமன் விட்ட அம்பு வேகமாக வந்து கும்பகருணன் கையைத் துணித்து விட்டது. ஆனால், கும்பகருணன் ஒரு சிறிதும் கலங்கவில்லை. "அற்று வீழ்ந்த கை அறாத வெங்கையினால் எடுத்து"2 அஞ்சாது குரங்குக் கூட்டத்தைக் குமைக்கிறான். இராமன் காத்து உடன் நிற்கவும் அவன் வானரப்படையைக் கும்பகருணன் கொன்று குமைப்பதை வியந்து உலகு நோக்கியது; அஞ்சியது.

**உள்ள கையினும் அற்றவெங் கரத்தையே**
**அஞ்சின உலகெலாம்**

இராமன் கும்பகருணனின் எஞ்சியகையையும் கால்கள் இரண்டையுங்கூடத் துணித்து விட்டான். இராமனின் அம்புகள் வேகமாக வந்து தன்கையையும் கால்களையும் அறுத்துத் தள்ளி உடலைச்

சல்லடைக் கண்களாகத் துளைத்த போதிலும் கும்பகருணனின் "செய்ய கண்பொழி தீச்சிகை யிருமடி சிறந்தது" என்கிறான் கம்பன். **முன்பைவிட இரண்டு மடங்கு தீச்சுவாலை சிந்தக் கும்பகருணன் விழித்தான் என்றால், விழித்த கண்ணை அழித்து இமைக்கவில்லை என்பது தானே பொருள்?** கும்பகருணன் பற்றி இப்படிக் குறிப்பாகவாவது குறிப்பிடும் கம்பன் இராமன் பற்றிக் குறிப்பாகவேனும் குறிப்பிடவில்லை. மாறாகக் கும்பகருணனோடு போர் புரியும் போது இராமன் கை நடுங்கினான் என்கிறான்.

கைகளும் கால்களும் இழந்த கும்பகருணன் அருகில் ஒரு குன்று. அதை வாயாற்பற்றிப் பறித்து இராமனை நோக்கி வீசுகின்றான். குன்றொன்று தன்னை நோக்கி வரக் கண்டதும் இராமன் கைகள் நடுங்குகின்றன. இக் காட்சியை,

***தீயி னாற்செய்த கண்ணுடை யானெழுஞ் சிகையினாற் றிசைதீய***
***வேயி னாற்றிணி வெற்பொன்று நாவினால் விசும்புற வளைத்தேந்தி***
***பேயி னார்ப்புடைப் பெருங்கள மெரிந்தெழப் பிலந்திறந் ததுபோலும்***
***வாயி னாற்செல வீசினன் வள்ளலும் மலர்க்கரம் விதிர்ப்புற்றான்*** 3

எனக் கம்பன் விவரிக்கிறான்.

**கண்களைக் கும்பகருணன் இமைக்கவில்லை. முன்பைவிட அவை சிவந்தன; ஒளிர்ந்தன. இராமனுக்கோ கண் இமைத்ததா இல்லையா என்பது நமக்குத் தெரியாது; ஆனால் கையோ நடுங்கிவிட்டது என்கிறான் கம்பன்.**

கும்பகருணன் இராமன் போரிலே, பழந்தமிழ் இலக்கியங்களான புறநானூறு, சீவகசிந்தாமணி, பெருங்கதை, திருக்குறள் என்பவை காட்டும் போர் இலக்கணத்தின்படி இராமன் புறமுதுகிட்டவன் ஆகானா? **கண்களை இமைத்து விட்டாலே புறமுதுகிட்டதாய் ஆகும் என்றால் கையே நடுங்கிவிட்ட பின்பும் புறமுதுகிட்டதாக ஆகாதா??!!**

"ஒரு மொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" 4 என்ற விதிப்படி, சோறுண்டேன் என்றால் கறியும் உண்டேன் என்ற பொருள் பெறப்படுவது போல் "மலர்க்கரம் விதிர்ப்புற்றான்" என்றால் கண்ணும் விதிர்ப்புற்றதாக - இமைத்ததாக ஆகாதா?

*முடிவு தான் என்ன?*

***"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!"*** *5*

அடிக்குறிப்புக்கள்:

1 புறம். 290. எடுத்தெறி ஞாட்பு - படைக்கலங்களை எடுத்தெறியும் போர்
2 கும்பகருணன் வதைப்படலம்
3 "அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்" - தொல். சொல். உரியியல் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
4 நன்னூற் சூத்திரம் - 359.
5 குறுந்தொகை பா. 2.

## அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்

# Sri Nadarajar Temple

# குடமுழுக்கு விழா மலர்

## CONSECRATION CEREMONY SOUVENIR

**10 - 02 - 2019**

2, Salisbury Road, Manor Park, London, E12 6AB

சைவசமயக் கிரியைகள், சடங்குகள், நம்பிக்கைகள், வழக்கங்கள், தத்துவங்கள், வழக்காறுகள் பற்றிய வினாக்களும், விடைகளும்

A Catechism of Saivite Rites, Rituals, Beliefs, Customs, Principles And Practices

சைவ முன்னேற்றச் சங்கத்தினரால் 10-02-2019 அன்று வெளியிடப்பட்டுள்ள குடமுழுக்கு விழா மலர் பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. இம் மலர்,ஆலயங்கள் தொடர்பானதும், சைவசமயம் தொடர்பானதுமான பலதரப்பட்ட வினாக்களுக்கு கேள்வி - பதில் மூலம் தமிழிலும் ஆங்கிலத்திலும் விடைகள் தர முயற்சிக்கின்றது. தற்காலப் புலம்பெயர் தேசங்களில் வாழும் எம்மினத்தவருக்கு இம்மலர் ஒரு வரப்பிரசாதமாக இருப்பதனால் ஒவ்வொருவர் இல்லத்திலும் தங்கள் சமயம் சார்ந்ததும் கோயில் தொடர்பானதுமான பல தரப்பட்ட விடயங்களை அறிந்து கொள்வதற்கு இந்நூல் இருப்பது அவசியமாகின்றது. தமிழிலும் ஆங்கிலத்திலும் சமயம் பற்றிய பல விளக்கக் கட்டுரைகள் பல இம் மலரில் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

250ற்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்த மலரின் விலை. £ 5.00 பவுண்கள் மட்டுமே.(தபாற்செலவு தனி).. இக்குடமுழுக்கு மலரை பெற விரும்புபவர்கள் சைவ முன்னேற்றச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 02085144732.

# சைவமுன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு

# நடராஜர் திருக்கோயில்

# திருக்குடமுழுக்கு

# 10.02.2019
















Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு.
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com



சிவயோகம்
SIVAYOGAM

# இந்துக் கலாசார மையம்



128, Aurelia Road, Croydon CRO 3BF
Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333
Email: sivashakthy@sivayogam.co.uk



**குறைடனில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் மூலஸ்தானம்**

அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனை ப் பிரார்த்திக்கின்றோ ம். அம்பாளின் அருளாலும், அடியவர்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்குத் திருக்கோயில் அமைக்கும் திருப்பணி நடைபெற்றுக். கொண்டிருக்கின்றது. மேலும் திருப்பணியை விரைவாக நிறைவேற்றுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம். வங்கிக் கணக்கு விபரம்

Name :- SIVAYOGAM BUILDING FUND


Account No. :- 20057541

Sort Code :- 20 21 78

Bank :- BARCLAYS BANK

நன்றி

அறங்காவலர் சபையினர்


Lycamobile
4G LTE
Out of this world data...
20GB
Unlimited UK minutes
Unlimited UK texts
...with UK Plan Mega
Just £10*
for the first month
£20/30 days thereafter
lycamobile.co.uk
0207 132 0322
*New customers only.
When purchased online.

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com


Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinisshinryukarate@gmail.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139



"Ammanai Saran Addinthal Athika Varam Peralam"
**SRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
Founded on 10.08.1991 Charity No. 1014409
5 Chapel Road London W13 9AE,
Tel: 020 8810 0835/ 020 8840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org

# தியான மண்டபம்



## அம்பிகைக்கு ஓர் மண்டபம் அமைத்திடுவோம் வாரீர் !

6000 சதுர அடியில் மூன்று தளங்களைக் கொண்டு அமையும் தியான மண்டபம் ஒவ்வொருவரும் இணைந்திட ஒரு சதுர அடிக்கு £180 பவுண்களே. அம்பிகையின் அருட்கடாட்சத்திற்கு ஆளாகுங்கள்.

கடந்த 14.07.2018 அன்று அழகுற அமையப் போகும் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற துர்கை அடியார்கள் அனைவரும் தங்களால் முடிந்த நன்கொடையை வழங்கி உதவுங்கள்!

சிறுதுளி பெரு வெள்ளம்

Please Extend your support to build our Meditation Hall
your Magnanimity will enable us to build
the Three Story 6000 Squate Feet Meditation Hall.
Sponsorship of £180 for a Square feet.

Bank Details: SKTA Temple Trust
LLOYDS Bank, Sort Code: 30-98-91| Account No: 02717646

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்!**

*Please Donate as much as you can!*

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

*ஏப்பிரல் (14-04-2019) தொடக்கம் செப்டெம்பர் (12-09-2019) வரை*

| | | |
|---|---|---|
| 14.04.2019 | ஞாயிறு | விகாரி வருடப்பிறப்பு |
| 18.04.2019 | வியாழன் | சித்திரைப் பௌர்ணமி |
| 27.04.2019 | சனி | நடேசர் அபிஷேகம் (மாலை) |
| 29.04.2019 | திங்கள் | திருநாவுக்கரசர் குருபூசை |
| 21.05.2019 | செவ்வாய் | சம்பந்தர் குருபூசை |
| 07.06.2019 | வெள்ளி | சேக்கிழார் குருபூசை |
| 06.07.2019 | சனி | மாணிக்கவாசகர் குருபூசை |
| 08.07.2019 | திங்கள் | ஆனித் திருமஞ்சனம் (நடேசர் அபிஷேகம்) |
| 17.07.2019 | புதன் | ஆடிப்பிறப்பு |
| 31.07.2019 | புதன் | ஆடி அமாவாசை |
| 07.08.2019 | புதன் | சுந்தரர் குருபூசை |
| 02.09.2019 | திங்கள் | ஆவணி சதுர்த்தி |
| 12.09.2019 | வியாழன் | நடேசர் அபிஷேகம் (மாலை) |

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.00 மணிமுதல் 12.30 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.30 மணிவரை

அன்பர்கள் அனைவரும் வந்து, ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத், திருவருள் பெற்று உய்யுமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ .......................... Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# ஆலயங்களும் அர்ச்சகர்களும்

**இறைவனுக்கும் பத்தனுக்கும் நடுவில் தரகரைப்போல் அர்ச்சகர் எதற்கு என்று சில பகுத்தறிவாளர்கள் கேள்வி கேட்கிறார்கள்.** இவர்களுக்கு ஆலயம் பற்றியும், அங்கு நடக்கும் வழிபாடு, கிரியைகள் பற்றியும் அர்ச்சகரின் பங்கு என்ன என்பதுபற்றியும் எதுவுமே தெரியாது என்றே எண்ணத்தோன்றுகின்றது. ஏனெனில், தரகர் என்றால் பொருள்களை வாங்கி விற்கும் வியாபாரத்தில் வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையிலே செயற்படுபவர் என்றாகும். கோயிலிலே என்ன வாங்குகிறோம் அல்லது கோயிலில் என்ன விற்கிறார்கள் என்பது தெரியவில்லை.

இந்த **அர்ச்சகர்கள், தாங்கள் உலக நன்மையின் பொருட்டுப் பூசை செய்கிறோம் என்கிறார்கள். எங்கள் நலனுக்கு நாங்கள் பூசை செய்ய முடியாதா?** இது இன்னொரு சாராரின் கேள்வி. இவர்கள் உலகம் என்றால், தாங்கள் மட்டுமே என்று நினைக்கிறார்கள். நான் மட்டும் உலகம் அன்று. நான் பூசை செய்வதால், அது எனக்கு மட்டுமே பலன் கொடுக்கும்; உலகத்துக்கு அது பயன்படாது.

**ஆலய வழிபாட்டுக்கு ஆதாரமாக இருக்கும் ஆகமங்கள் அர்ச்சகர் பற்றியும் ஆலய வழிபாட்டின் நோக்கங்கள் பற்றியும் தெளிவாக் கூறுகின்றன.**

உலகிலுள்ள அனைவரின் நல்வாழ்வின் பொருட்டு, கிராமம், நகரம், பட்டணம் ஆகிய இடங்களில் விசேஷமான முறையில், தேவர்களாலோ, முனிவர்களாலோ அல்லது மனிதர்களாலோ முறைப்படி தாபிக்கப்பட்ட இலிங்கத்தினையோ அல்லது தானாகத் தோன்றிய இலிங்கத்தினையோ, இறைத்தன்மை பொருந்திய மூர்த்தங்களையோ தினமும் பூசை செய்து வழிபடுவது பரார்த்த பூசை எனப்படும். இந்தப் பரார்த்த பூசையின் பலன் அனைத்து உயிர்களுக்கும் உரியதாகும்.

சிவாலயங்களில் பூசை செய்யும் அர்ச்சகர்களுக்கு ஆதிசைவர், சிவப்பிராமணர், சிவேதியர், சிவவிப்ரர், சிவாசாரியர் போன்ற பல பெயர்கள் உள. பரார்த்த பூசை செய்வதற்காகச் சிவபெருமானால் நேரடியாகக் தீட்சை கொடுக்கப்பெற்ற கௌசிகர் முதலான ரிஷிகள் வம்சத்தில் வந்தவர்களே இந்த அர்ச்சகர்கள் என்றும் அவர்களே பூசை செய்யும் தகுதி பெற்றவர்கள் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

"பரார்த்த யஜனம் கார்யம், சிவ
விப்ரைஸ்து நித்சய" - சிவாகமம்

பரார்த்த பூசை என்னும் திருக்கோயில் பூசையானது ஆதிசைவரான சிவவிப்ரராலேயே தினமும் செய்யப்படவேண்டும் என்பது இதன் பொருள்.

பெரியபுராணத்திலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவ ராம்முனிவர்

தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பியவர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே உரியனஅப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ

என்று பெரிய புராணத்திலே சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.

மேலே குறிப்பிடப்பட்டவை மூலம் அர்ச்சகர் தரகரல்லர் என்பதும் அவர் சிவபெருமானின் ஆணையாலேயே உலக நன்மைக்காகப் பூசை செய்பவர் என்பதும் தெளிவாக விளங்குகின்றது.

சிவாகமத்திலே கூறியிருப்பதின்படி, திருக்கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்கிரகங்கள் (மூர்த்திகள்) மூன்று காரணங்களாற் தெய்வத் தன்மை அடைகின்றன. அவையாவன:

1. அர்ச்சகருடைய மனோபாவம்
2. அர்ச்சனையின் சிறப்பு
3. விக்கிரகத்தின் அழகு

இந்தத் திருவுருவச்சிலைகள் சாந்நித்யம் பெறுவதற்கு ஆசாரியரின் தவவலிமையே காரணம் என்கிறது சிவாகமம்.

மூர்த்திகளை எண்ணெய் தேய்த்து, நீராட்டி, வஸ்திரம் அணிவித்து, தன் குழந்தையைப்போலக் கவனிக்கும் அர்ச்சகர் தன்னைப் பல்வேறு தருணங்களில் எவ்வாறு நினைத்துக்கொள்ளவேண்டும் என்றும் ஆகமம் கூறுகின்றது. **ஆவாகனம் முதலான காலத்தில் ஆசார்யர் குரு உருவத்திலும், அலங்கார காலத்தில் தாயைப்போலவும், நைவேத்தியம் செய்யும்போது மந்திர ரூபமாகவும், தோத்திரம், பிரதட்சணம் செய்யுங்காலத்தில் பத்தனைப்போலவும் தன்னைப் பாவித்துக் கொள்ளவேண்டும்** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியான பெருமையையுடைய **அர்ச்சகர்கள் மதிக்கப்படவேண்டியவர்கள். ஆனால், அவர்கள் கூலிக்கு வேலைசெய்யும் தொழிலாளர்போலவே நடத்தப்படுகிறார்கள்.** அது அவர்களின் பிழையன்று; காலத்தின் கோலமே.

இதை வள்ளுவரும்,

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்**
**காவலன் காவான் எனின்**

என்பர்.
இதையே பாரதியும்,

**"பேய்கள் அரசாண்டால் பிணந்தின்னும் சாத்திரங்கள்"** என்று பாடினார்

இது உண்மையென்பதை நாம் காணமுடிகிறது. **என்ன நடந்தாலும் நடக்கட்டும்; இறைவன் இருக்கிறார். அவருக்குச் சேவை செய்வதன்மூலம் உலக நன்மைக்காக வழிபாடுகளை நடத்தவேண்டும் என்று சிந்தித்து அர்ச்சகர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்யவேண்டும்; செய்யட்டும்.**

# இறைவனை ஏசலாமா?

திருமதி அமிர்தநாயகி தியாகலிங்கம்

இறைவனுடன் கயிலையில் இருந்த சுந்தரர் அங்கிருந்த பணிப்பெண்கள் அநிந்திதை, கமலினி ஆகிய இருவர் மீதும் ஆசை கொண்டார். இவருடைய ஆசையைப் பூர்த்தி செய்ய விரும்பிய இறைவன் சுந்தரரையும் அந்த இரு இளம் பெண்களையும் பூவுலகில் பிறந்து இன்பதுன்பங்களை நுகரச் செய்தார். வளர்ந்து வாலிபனான சுந்தரர் மணமுடிக்க விழைந்தபோது, இறைவன் தடுத்தாட்கொண்டார். அப்போது கோபப்பட்ட சுந்தரர், இறைவனைப் "பித்தா" என ஏசினார். தன் நாடகத்தைத் தொடங்கிய இறைவன் கோயிற் கருவறைக்குள் சென்று ஐக்கியம் ஆகிறார். உணர்ந்த சுந்தரர், இறைவனிடம் மன்னிப்புக் கேட்க, இறைன் தன்னைப் பாடும்படி பணிக்கிறார். சுந்தரர் "எப்படிப் பாடுவேன்?" என வினவ, இறைவன், "என்னைப் பித்தா என்றாயே! அப்படியே பாடு" என்று கூற, "பித்தா பிறை சூடி" என்று தொடங்கும் தேவாரப்பதிகம் பிறந்தது.

பின், சிவ ஆலயங்களைத் தரிசித்து வந்த சுந்தரர் திருவாரூரில் பரவையாராகப் பிறந்த கமலினியைத் திருமணம் செய்து கொண்டார். பின்பு சுந்தரர் இறைவனை பாடி, ஊர்ஊராகச் செல்ல, சுந்தரரை தொடர்ந்த இறைவனும் சோதனைகள் செய்து தன் நாடகத்தைத் தொடர்கிறார்.

திருவொற்றியூரில் சங்கிலியாராகப் பிறந்த அநிந்திதையை பார்த்து ஆசைப்பட்ட சுந்தரர் அக்கோயிலில் ஈசனைத் தனக்காக சங்கிலியாரிடம் தூதுபோக வேண்டுகின்றார். ஈசனும் சங்கிலியாரின் கனவில் சுந்தரரை மணம் செய் என்றும், அதற்கு முன் உன்னை பிரியாதிருப்பேன் எனச் சத்திய வாக்கைச் சுந்தரரிடம் இருந்து பெறுமாறும் கூறுகின்றார். தன் விருப்பத்தைச் சுந்தரர் வெளியிட, சங்கிலியார் சுந்தரரிடம், "நீங்கள் ஏற்கெனவே திருமணமாகி மனைவியுடன் இருப்பதால், என்னைப் பிரியேன் என இறைவன் கருவறை முன் நின்று சத்தியம் செய்து தரவேண்டும் என்று நிபந்தனை விதித்தார். சத்தியத்தைத் தவிர்க்க நினைத்த சுந்தரர் இறைவனிடம் சென்று, "நான் சத்தியம் செய்ய வரும்போது தாங்கள் கருவறையில் இராமல் வெளியே உள்ள மகிழ மரத்தடியில் இருக்கவேண்டும்" என வேண்ட ஈசனும் உடன்பட்டார். ஆனால் இதை ஈசன் சங்கிலியாரிடம் தெரிவித்து, "நீ சுந்தரரிடம் சத்தியம் கேட்கும்போது கருவறையில் வேண்டாம், மகிழமரத்தடியில் செய்யுங்கள்" என வேண்டவும் என அறிவுறுத்தினார். இதனால் மறுநாள் சங்கிலியாரை காண வந்த சுந்தரரிடம் மகிழமரத்தடியில் சத்தியம் செய்து தரும்படி வேண்ட, ஈசனின் நாடகத்தையும் திருவிளையாடல்களையும் உணர்ந்த சுந்தரர் மகிழமரத்தடியில் சத்தியம் செய்ய, மனமொத்த அவர்களின் திருமணம் இனிதே முடிந்தது.

சில காலங்களின் பின், திருவாரூர் செல்லச் சுந்தரரின் மனம் ஏங்கியது. சங்கிலியாரிடம் இருந்து நீங்கித் திருவாரூர் செல்லவெனச் சுந்தரர் ஊர் எல்லையைக் கடந்தபோது அவருடைய இரு கண்களும் பார்வையை இழந்தன. பார்வையை இழந்த சுந்தரர் தட்டுத்தடுமாறி ஆலயங்களுக்கு செல்கையில் ஒரு கோயிலில் இறைவன் சுந்தரருக்கு ஊன்றுகோலை கொடுக்கிறார். இவ்வாறு நடந்து காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவிலுக்கு வரும் சுந்தரர் இறைவியின் கருணையால் இடக்கண் பார்வையைப் பெறுகிறார். இடக்கண் பெற்ற சுந்தரர் மகிழ்ந்து. "ஆலந்தான் உகந்து அமுதுசெய்தானை" என்ற பதிகம் பாடியருளினார். ஒவ்வொரு பாட்டின் இறுதி வரியிலும் "காணக் கண் அடியேன் பெற்றவாறே.." என்று முடிவது இப்பதிகத்தின் சிறப்பாகும்.

பின் பல திருத்தலங்களுக்கும் சென்று தாம் மிகவும் விரும்பிய திருவாரூர் திருத்தலத்தை அடைகிறார். இங்கு அவர், "மீளா அடிமை உமக்கே ஆளாய்" என்னும் திருப்பதிகத்தைப் பாடுகிறார். இப்பதிகத்தின் இறுதி வரி "வாழ்ந்து போதீரே" என்று முடிகிறது. இப்பதிகத்தைப் பார்த்தால் எல்லாப்பாடல்களிலும் ஈசனைச் சுந்தரர் ஏசுவதும், பழிப்பதும், திட்டுவதும், கேலி செய்வதும், மிரட்டுவதும் போலத் தோன்றும். சுந்தரர் ஈசனின் தோழனாகியபடியால் இதையெல்லாம் செய்யலாம். ஈசனும் சுந்தரரின் மீது தான் கொண்டை அன்பையும் தோழமையையும் வெளிப்படுத்தவும் சுந்தரரின் பக்தியை உலகுக்குக் காட்டவும் இந்த நிகழ்வை நடத்தியிருக்கலாம். எப்படியோ, சுந்தரர் வலது கண்ணிலும் பார்வையைப் பெறுகிறார்.

கண்களில் குறைபாடு, பிரசினைகள் வந்தால் மருத்துவத்துடன் இப்பதிகங்களைப் பாராயணம் செய்வது நன்மை பயக்கும்.

**பாராயணம் செய்யும் முறை:-**

முதலில் உடலைச் சுத்தம் செய்து, நெற்றியிலே திருநீறணிந்து, "ஓம் நமப் பார்வதி பதயே! ஹரஹர மகாதேவா எனச் சொல்லி பின், திருச்சிற்றம்பலம் என்று சொல்லிப் பதிகங்களை பாடி, பின் நிறைவு செய்யும்போதும் திருச்சிற்றம்பலம் என்று சொல்லி வணங்க வேண்டும்.

இறைவனுடன் தோழமை பூண்டதால் இறைவன் சுந்தரருக்காக:
ஆற்றில் இட்டு குளத்தில் பன்னீராயிரம் பொன் எடுத்தது.
முதலை வாயில் இருந்து பாலகனை மீட்டது.
பூதகணங்கள் மூலம் நெல்லை கொண்டுவரச் செய்தது.
ஈசனிடம் இருந்து பொன்னும் பொருளும் பலமுறை பெற்றது
போன்ற நிகழ்வுகளை செய்திருந்தார்.

திருப்பாச்சிலாச்சிராமம் என்ற தலத்தில் இறைவனிடம் சுந்தரர் பொன் வேண்ட, இறைவன் கொடுக்காத காரணத்தினால் "வைத்தனன் தனக்கே தலையுமென்னாவும்." என்ற பதிகத்தைப்பாடும்போது, "இவரலா தில்லையோ பிரானார்" என்று என கடிந்து பாடுகிறார். பதினொரு பாடல்களையும் பாடியபின் தன் தவற்றைத் தானே உணர்ந்து இறுதித் தேவாரத்தில்,

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல
எம்பெரு மானென்றெப் போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்
தடிகளை அடிதொழளப் பன்னாள்
வாயினாற் கூறி மனத்தினால் நினைவான்
வளவயல் நாவலா ரூரன்
பேசின பேச்சைப் பொறுத்தில ராகில்
இவரலா தில்லையோ பிரானார்

என்று பாடி ஈசனிடம் மன்னிப்புக் கோருகிறார். **"இவரை விட்டால் வேறு கடவுள் இல்லையா?" என்று பதினொரு பாடல்களில் திட்டியபின், என் மன்னிப்பை ஏற்காவிட்டால் இவரைவிட வேறு கடவுள் இல்லையா என்று அதையும் தோழமை உரிமையுடனேயே சுந்தரர் கேட்பது சுவையாக இருக்கிறது.**

இறைவன் அனுப்பிய வெள்ளை யானை மீது அமர்ந்து திருக்கையிலை அடைந்த சுந்தரரை இங்கு வந்துவிட்டாயா எனக்கூறி இறைவன் அணைத்துக் கொண்டார்.

# சங்கத்தமிழ்ப் புலவர்களும் கோயில் பற்றிய அவர்களின் உணர்வுகளும்

திருமதி தனலட்சுமி குலசேகரம்

தமிழ்க் கலைகளின் உறைவிடமாகத் திகழ்ந்த கோயில்கள் அழிந்துபோனால் தமிழர் தமது கலைகளின் பண்டைய பெருமைகளை உலகுக்கு எடுத்துக்காட்டவே சங்கத் தமிழ்ச் சான்றோர் அன்றைய கற்கோயில்களைத் தம் அழகிய சொற்பாக்களில் இயம்பி வைத்துள்ளார்கள். பாண்டியமாறன் வழுதி என்ற மன்னனின் போர் வலிமையால் பகை நாட்டுக் கோயில் பாழ்பட்டுப்போகும் என்பதை மருதன் இளநாகனார் என்ற புலவர்:

கலிக்கெழு கடவுள் கந்தம் கைவிட
பலகன் மாறிய பாழ்படு பொறியில்
நரைமூதாளர் நாயிடக் குழிந்த
வல்லின் நல்லகம் நிறையப், பல்பொறிக்
கான வாரணம் ஈனும்
காடாகி விளியும் நாடுடை யோரே (புறநானூறு 52:12-17)

மனித நடமாட்டத்தாலும் விழாக்களின் ஆரவாரங்களாலும் நிறைந்த கோயில் தூண் வழிபாடு இன்றிப் பாழ்பட்டுப்போக, கோயில் பலியிடத்தில் காட்டுக் கோழிகள் முட்டையிட்டும், நரை முதிர்ந்தோர் சூதாடிய நல்ல மனையிடமும் அழிந்து நாடு காடாகிப்போகும் என்றார்.

சங்கத்தமிழ்ச் சான்றோரிடையே ஈழத்துப்புலவனாக வலம் வந்தவர் ஈழத்துப் பூதந்தேவனார். அவர் ஒருவரே ஈழத்தமிரும், சங்ககாலத்தில் ஈழத்திலும் புலவர் வாழ்ந்தார் என்பதற்கு ஆதாரமாகவும் இருப்பவர். அவர் அகநானூற்றில் இன்றைய ஈழத்துக்கோயில் போன்று பாழடைந்து கொண்டிருக்கும் கோயில் ஒன்றைக் காட்டுகின்றார்

பெருங்கை யெண் கிளங்குரும்பி தேரும்
புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கந்தாட் கந்தத்து
உடனுறை பழமையிற் றுறத்தல் செல்ல
திரும்புறாப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பின் மலைமுதலாறே (அகநானூறு 307-10-5)

அது கடவுள் இல்லாத கோயில் - வழிபடுவோர் இன்மையால் பாழ்பட்டுப்போகும் கோயில். அதன் சுவர்களோ புதர் மண்டி, புற்றுக்களுடன் காணப்படுகின்றன. அந்தப் புற்றுக்களில் உள்ள புற்றாஞ் சோற்றை(கறையான்களை), பெருங்கைகளையுடை கரடிக்கூட்டம் ஆராய்கின்றன. எனினும் வலிய அடியினையுடைய தூண் அசையாது நிற்கின்றது. கோயிலில் நெடுங்காலம் வாழ்ந்த பழக்கத்தினால் அதனைவிட்டு நீங்காது புறாக்கள் தங்கள் பெடைகளுடன் கூடிச் சத்தமிட்டுக்கொண்டு வாழ்ந்து வருகின்றனவாம்.

பாண்ணடியனாதி நெடுங்கண்ணான் கோயில்கள் பாழ்படுவதை மிக அழகாகச் சொற்பாவில் செதுக்கியுள்ளார்:

முனை கவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீரெழுந்து
மனை பாழ்பட்ட மரைசேர் மன்றத்துப்
பனைத்தாள் யானைப் பரூஉப் புறமுரஞ்சிச்
செதுகாழ் சாய்ந்த முதுகாற் பொதியில்..

போர்முனை நாட்டைக் கவர்ந்து கொள்ள, கலங்கிய மக்கள் ஓடியதால், பீர்க்கங்கொடி படர்ந்து மனைகள் பாழ்பட, அங்கேயுள்ள மன்றத்துக் காட்டு மரையும் வந்துசேர, பருத்த கால்களையுடைய யானை தனது பெரிய முதுகை உராஞ்சுவதால் சோர்ந்து, விட்டம் விழுந்த பழைய தூண்களையுடைய கோயில் ஒன்றை வருணிக்கிறார்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பவர் மக்கள் ஊரை விட்டுச் சென்றதால் பாழடைந்த கோயிலொன்றை அகநானூறில் படம்பிடித்துக்காட்டுகிறார்.

கோயிலுக்கருகே ஒரு முருங்கை மரம். அதை உண்ண வந்த யானை ஒன்று கோயிற்சுவரில் உரசுகின்றது. கோயிற்சுவர் சரிய அதன் உத்திரம் கீழே விழ, அதனால் கோயில் மாடத்தில் குடியிருந்த புறாக்கள் பறந்தனவாம். தூசி மண்டிக்கிடந்த பலிபீடத்தில் குட்டி ஈன்ற நாயொன்று குடியிருந்ததாம். கறையான்களோ புற்றெழுப்பி மரங்களைத் தின்றுகொண்டிருந்தனவாம். இவ்வாறு கோயில் பாழ்பட்டு இருப்பதைக் கூறிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் கோயில் சீரமைக்கப்பட்டு வழிபாடு செய்ததையும் காட்டியுள்ளார்.

கோயிலொடு குடி நிறீகி
வாயிலொடு புழை அமைத்து (பட்டினப்பாலை 286-287)

எனத் திருமாவளவன் கோயில் அமைத்ததையும்,

கெண்டி மகளிர் உணதுறை மூழ்கி
அந்திமாட்டிய நந்தா விளக்கின்
மலர்அணி மெழுக்கம் ஏற்றிப் பலர்தொழ
வம்பவர் சேர்க்கும் கந்துடைப்பொதியில் (பட்டினப்பாலை 246-249)

சிறைப்பட்ட அரச மகளிர் நீராடி மெழுகிய மலரால் அலங்கரித்து அந்திநேரம் மாட்டிய விளக்கின் ஒளியில் பலர் கும்பிட வழிப்போக்கர்களும் வந்து தங்கும் தூண்களையுடைய கோயில்கள் இருந்ததையும்


சோறு வாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்து ஒழுகி
ஏறுபெயரச் சேறாகி
தேர்ஓடத் துகள் கெழுமி
நீறுஆடிய களிறுபோல
வேறுபட்ட வினை ஓவத்து
வெண்கோயில் மாசு ஊட்டும் (பட்டினப்பாலை 44-50)

சோறு ஆக்கும்போது கஞ்சி ஆறுபோல ஓடிச் சேறாகி, பின் காய்ந்து தேர் ஓடும்போது துகளாக எழுந்து சாம்பலில் குளித்த யானைபோல் பல்வேறுபட்ட ஓவியங்கள் தீட்டப்பட்ட கோயிலை மூடுகின்றது என்றும் காட்டிப் போந்துள்ளார்.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் பல்வேறுபட்ட விடயங்கள் பாக்கள் வடிவில் காணப்படுகின்றன.

# The well - turtle and the sea-turtle

## கூவல் ஆமையும் குரைகடல் ஆமையும்



The well - turtle met the sea-turtle

"Where are you from?" he asked

"I'm from the sea"

"Really? What's your sea like?"

"It's very big!"

"How big is it?"

"It's very, very big!"


"Is it as big as this well?"

So saying the little well-turtle leaped high up within its narrow abode

So also are sinners blind to the infinite Grace of

Shiva the Lord of the gods

கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகட லென்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே



அப்பர் தேவாரம்

*திருமுறை 5 பதிகம் 100 பாடல் 5*

கிணற்றாமை கடலாமையை நோக்கி, கடல் இந்தக் கிணற்றளவு பெரிதாக இருக்குமா என்று கேட்டல்போல் பாவிகள் சிவபெருமானின் பெருந்தன்மை பார்ப்பதற்கு அரிதென்பர்.

ஆங்கில மொழிபெயர்ப்பு: திரு சோ பத்மநாதன்.

# கண்ணனும் தாத்தாவும்



முத்து

கும்பாபிஷேகம் பார்க்கக் கொடுத்துவைக்கவேண்டும் என்று சொல்வார்கள். அதனால் கும்பாபிஷேகம் எங்கே நடைபெற்றாலும் எங்கிருந்தோ பக்தர் கூட்டம் அங்கே வந்து குவிந்துவிடும். இலண்டனிலுள்ள கோயில்கள் மிகப்பெரியவை அல்ல. அதனால் அதிகமாக மக்கள் வருவதால் இடநெருக்கடி சொல்லில் அடங்காது.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் அரும்பெரும் முயற்சியால் தாபிக்கப்பட்ட அழகிய சிதம்பரேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் கடந்த பெப்பிரவரி மாதம் 10ஆம் திகதி ஞாயிறு காலை இனிதே நிறைவேறியது. கண்ணனுக்கும் தாத்தாவுக்கும்கூட அந்தக் கும்பாபிஷேகத்தைப் பார்த்துத் தரிசிக்கும் பேறு கிடைத்தது. கோமாதா பூசைக்காகக் கோமாதா கொண்டு வரப்பட்டது. பக்தர் கூட்டம் கோமாதாவைப் பார்க்க வேகமா முன்னோக்கி நகர்ந்தது. மண்டபத்துக்குக் கிட்ட வந்தபோது தாய்ப்பசு திரும்பிக் கன்றைத் தேடியது. அதன் கண்ணில் கன்று தென்படாததால் திரும்பித் தன் கன்றைத் தேடிப்போக முற்பட்டது. அதற்கிடையில் மக்கள் கூட்டத்தை விலக்கிக் கன்றைக் கொண்டுவந்தார்கள். அதன்பிறகே தாய்ப்பசு மண்டபத்துள் வந்தது. குருக்கள் முறைப்படி கோமாதா பூசையை நிறைவேற்றினார். கண்ணனும் தாத்தாவும் மக்கள் கூட்டத்துக்கிடையே கஷ்டப்பட்டுக் கோயிலை வலம் வந்தார்கள். சிவகாமி, சிதம்பரேஸ்வரர் மண்டபம் உயரமாக இருந்ததால் எங்கிருந்தாலும் பார்த்து வணங்கக்கூடியதாக இருந்தது. கோயிலால் வீடு திரும்பி வந்ததும் அங்கே பார்த்தவற்றை அசை போட்டுக்கொண்டிருந்தார் தாத்தா. மாணிக்கவாசகரின் "உற்றாரை யான்வேண்டேன்" என்ற திருவாசகப் பாடலின் கடைசி வரியான "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"என்ற வரி நினைவுக்கு வந்தது.

கண்ணன்: என்ன தாத்தா வாயிலே ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

தாத்தா: சிவன்கோயிலில் பார்த்த பசு, கன்றைக் காணாது தவித்த தவிப்பு, ஒரு திருவாசகத்தை ஞாபகப்படுத்தியது. அதைச் சொல்லிப் பார்க்கிறேன்.

கண்ணன்: ஆமாம் தாத்தா, தாய்ப்பசு கன்றைக் காணாமல் எவ்வளவு தவித்தது என்று நானும் பார்த்தேன்.

தாத்தா: தாய்ப்பசு கன்றைக் காணாது தவித்ததுபோல் நாங்கள் கடவுளைக் காணத் தவிக்கவேண்டும் என்பதுதான் அந்தத் திருவாசகத்தின் கருத்து, கண்ணா!

கண்ணன்: உங்களுக்கு எப்போதுமே எதைப் பார்த்தாலும் ஏதாவது தேவாரம், பாட்டு, பழமொழி நினைவுக்கு வந்துவிடும். அது ஏன் தாத்தா?

தாத்தா: ஓ! அதுவா? நான் சிறுவனாக இருந்தபொழுது எங்கள் வீட்டிலிருந்த பெரியவர்களும் அயலில் இருந்த பெரியவர்களும் எதற்கும் ஒரு பாடல், பழமொழி, தேவாரம் என்று சொல்வது வழக்கம். ஏன்? சிலர் திரைப்படப் பாடல் வரிகளைக்கூடச் சொல்வார்கள். அவற்றைக் கேட்டுக் கேட்டு எனக்கும் பழகிவிட்டது கண்ணா

கண்ணன்: இதைக் கேட்கும்போது நீங்கள் முன்பு சொல்லித்தந்த பழமொழி ஒன்று ஞாபகம் வருகிறது தாத்தா.

தாத்தா: அப்படியா! எங்கே சொல் அதை.

கண்ணன்: தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும். சின்ன வயதிலே நல்ல பழக்கங்களைப் பழகவேண்டும் என்று சொல்விட்டு இந்தப் பழமொழியையும் சொல்லிக்கொடுத்தீர்கள்.

தாத்தா: கெட்டிக்காரன். இப்டித்தான் கேட்கும் விஷயங்களை எல்லாம் மனத்திலே பதியவைக்கவேண்டும்.

கண்ணன்: ஓம் தாத்தா அது சரி, உங்களுக்கும் உங்கள் வயதில் இருக்கும் பெரியவர்களுக்கும் திரைப் பாட்டே பிடிக்காதே! அந்தக் காலத்தவர்கள் ஏன் திரைப்பாட்டை விரும்பிக் கேட்டார்கள்?

தாத்தா: ஓம்! அது நல்ல கேள்விதான். அதற்குக் காரணம் இருக்கிறது கண்ணா. அந்தக் காலத்துப் பாடல்கள் நல்ல கருத்துள்ளனவாக இருந்தன. கேட்பதற்கும் காதுக்கு இனிமையாக இருந்தன. இராகம் உள்ளனவாக இருந்தன. இந்தக் காலத்துப் பாடல்களில் நல்ல கருத்தோ உருப்படியான வார்த்தைகளோ இல்லை. அதனால் இன்றைய பாடல்களை எங்களால் இரசிக்க முடியவில்லை.

கண்ணன்: எனக்கு விளங்கக்கூடிய பாட்டொன்று சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா: நினைவில் உடனே வரும் பாட்டொன்று சொல்கிறேன். கேள் கண்ணா!
'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'
இதில் உனக்கு என்ன விளங்கியது? சொல் பார்க்கலாம்

கண்ணன்: சின்னக்குழந்தை பிறக்கும்போது நல்லதாக இருக்கும். பின் வளர்ந்தபின்தான் குழப்படிகாரனாக மாறும்.

தாத்தா: கொஞ்சம் சரி கண்ணா! அம்மா சரியாக வளர்க்காமல் விட்டால்தான் அது கெட்டுப்போகும். அம்மா கவனமாக பிள்ளைக்கு நல்லவற்றைச் சொல்லிச் செய்யப் பழக்கவேண்டும். படிப்பில் கவனம் வேண்டும். பிள்ளை தவறு செய்தால் கண்டிக்கவேண்டும். அப்போது அந்தப் பிள்ளை நல்ல பிள்ளையாக வளரும்.

கண்ணன்: அப்படியானால் என்னைப்போல இருக்கவேண்டும், அப்படித்தானே தாத்தா?

தாத்தா: இது நல்ல வேடிக்கை. நீ நல்ல பையனென்று யார் சொன்னது கண்ணா?

கண்ணன்: ஏன்? என் நண்பர்களின் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோருமே கண்ணன் நல்லபிள்ளையென்று சொல்கிறார்கள்.

தாத்தா: ஓ! அப்படியா செய்தி! சந்தோஷம், அப்படியே தொடர்ந்து நல்லவனாக வளர்வதற்கு இன்னும் என்ன செய்யவேண்டும் கண்ணா!

கண்ணன்: அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி சொல்லும் நல்லவற்றைக் கேட்டு நடப்பதுடன் ஆசிரியர் சொல்பவற்றையும் கவனமாகக் கேட்டு நடக்கவேண்டும்.

(இன்னும் என்ன சொல்லாம் என்று கண்ணன் கன்னத்தில் கை வைத்து யோசிக்கிறான்)

தாத்தா: இன்னும் என்ன சொல்லலாம் என்று யோசிக்கிறாய் போல் இருக்குக் கண்ணா!

கண்ணன்: ஆமாம் தாத்தா, சரியாக நான் நினைத்ததைச் சொல்கிறீர்கள் தாத்தா.

தாத்தா: வளர்ந்து வந்தபோது நீயாகவே வாழ்க்கைக்கு எது முக்கியமானது என்று கண்டுபிடித்து அதன்படி நடக்கவேண்டும் கண்ணா!

கண்ணன்: ஓகே! தாத்தா அப்படியே செய்வேன் தாத்தா. இப்போது நீங்கள் விரும்பிக்கேட்ட சினிமாப் பாடல் இன்னுமொன்று சொல்லுங்கோ.

தாத்தா: வளரும் பிள்ளைகள் கேட்வேண்டிய பாடல் ஒன்று சொல்கிறேன் கண்ணா
'தூங்காதே தம்பி தூங்காதே, சோம்பேறி என்ற பெயர் வாங்காதே
நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்துடன் தானும் கெட்டார்'

கண்ணன்: முதலாவது வரி விளங்கிவிட்டது தாத்தா. அதிகம் நித்திரை கொண்டு பொழுதைப் போக்கினால் பார்த்தவர்கள் எல்லோரும் சோம்பேறியென்று கேலி செய்வார்கள்.

தாத்தா: ஒவ்வொரு நாளும் முக்கியமானது கண்ணா. முடிந்த நாள் திரும்பிவராது. அதனால் ஒவ்வொரு நாளையும் பிரயோசனமாகக் கழிக்கவேண்டும். உலகத்தில் எத்தனையோ விடயங்களைப் படித்து அறியலாம், கேட்டு அறியலாம், பார்த்து அறியலாம்; அதனால் அறிவு வளரும். அதைவிட்டுவிட்டு சோம்பேறியாக இருந்தால் அந்த வாழ்க்கையால் ஒரு பயனுமே இல்லை.

கண்ணன்: அவனெப்படி நாட்டைக் கெடுக்க முடியும் தாத்தா?

தாத்தா: மனிதர்கள் ஏதாவது ஒரு தொழில் செய்யும்போது அவர் வாழ்வதற்குக் காசு

கிடைக்கும் அவர் செய்யும் தொழில் நாட்டுக்கு நல்ல சேவையாகும். ஓர் ஆசிரியர் எத்தனையோ மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பார். அதனாலே மாணவர்களுக்குப் பயன் உண்டு. மருத்துவர்கள் எத்தனையோ நோயாளிகளைக் காப்பாற்றுகின்றனர். அது நாட்டுக்குச் செய்யும் சேவை. அதைப்போல என்ன தொழில் செய்தாலும் அது நாட்டுக்கும் பயன்படும் கண்ணா!

பாட்டி: விவசாயிகள் (Farmers) உணவுப் பொருள்கள், பழங்கள், மரக்கறிவகை, நெல், கோதுமை போன்றவை எல்லாவற்றையும் உற்பத்தி (produce) செய்யாவிட்டால் எங்களுக்கு எப்படிச் சாப்பாடு கிடைக்கும் கண்ணா? அதைப்போல ஒருவருக்கு அது தொழில், மற்றப்பக்கத்தில் அதுவே நாட்டுக்குச் செய்யும் சேவை.

கண்ணன்: இப்போது எனக்கு நன்றாக விளங்கிவிட்டது. தாத்தா, பாட்டி எல்லோரும் உசாராக சுறுசுறுப்பாக இருந்து நேரத்தைப் பயன்படுத்த வேண்டும். அது எல்லோருக்கும் நல்லது.

பாட்டி: இந்தக் காலத்திலும் சில நல்ல பாட்டுக்கள் வருகின்றன. தாத்தா கேட்பதே இல்லை கண்ணா.

தாத்தா: கேட்பதற்கு அதைவிட நல்ல விஷயங்கள் இருக்கே. இப்போது பொழுதை வீணாகக் கழிக்கக்கூடாது என்றுதானே பேசுகிறோம். பாட்டிக்கு அது மறந்தே போச்சு.

பாட்டி: (பேச்சை மாற்ற நினைத்து) கண்ணா! ஸ்ரீராமுடன் இந்தக் கிழமை பேசவேண்டும் என்று சொன்னாயே!

கண்ணன்: ஆமாம் பாட்டி! நாங்கள் அவனுக்கு நடராசர் கோயில் கும்பாபிஷேகத்தைப் பற்றியும் சொல்லலாம். அவர்களையும் இங்குவந்து புதுக்கோயிலைப் பார்க்கச் சொல்லலாம்.

தாத்தா: ஆமாம் கண்ணா! நீ கட்டுரை எழுதிக்கொண்டு இருந்ததால் அவர்கள் பிறகு பேசலாமென்று பேச்சை நிறுத்திவிட்டார்கள்.

கண்ணன்: இதோ தாத்தா! இப்போதே தொலைபேசியை எடுக்கிறேன்.

(கண்ணன் அழைத்ததும் காத்திருந்தவர்போலச் சிவகுமார் தொலைபேசியை எடுக்கிறார்.)

சிவகுமார்: கண்ணா எப்படி எல்லோரும் சுகமா?

கண்ணன்: ஓம்! தாத்தா எல்லோரும் நல்ல சுகம். உங்களைப்பற்றியும் அடிக்கடி நினைப்போம். ஸ்ரீராம் என்ன செய்கிறான்?

சிவகுமார்: இங்கு இன்று நல்ல வெய்யிலாக இருக்கிறது. அதனால் வெளியில் விளையாடிக்கொண்டிருக்கிறான். இதோ கூப்பிடுகிறேன்.

ஸ்ரீராம்: கண்ணா! என்ன செய்துகொண்டிருக்கிறாய்? எப்போது இங்கு வரப்போகிறாய்?

கண்ணன்: நீங்கள்தான் இங்கு வரவேண்டும். லண்டனில் எப்போதும் ஏதாவது புதுப்புதுச் சம்பவங்கள் நடக்கும் (every day something new)

சிவகுமார்: அப்படியென்ன விசேஷம் கண்ணா? சொல்லு பார்ப்பபோம்

தாத்தா: நடராசர் கோயிலொன்று புதிதாகக் கட்டிக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. நானும் கண்ணனும் போய்வந்தோம். அந்தக் கோயிலுக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமாம்.

சிவகுமார்: நாங்கள் Easter holidayக்கு வரலாம். ஸ்ரீராமின் அப்பா அம்மாவுக்கு வேறு ஏதாவது திட்டம் இல்லாவிட்டால்தான்.

கண்ணன்: நீங்கள் எப்போதும் வரலாம். முன்கூட்டியே சொன்னால் நாங்கள் தயாராக இருப்போம் தாத்தா. ஸ்ரீராமையும் உங்களையும் சந்திக்க எங்களுக்கும் ஆசையாக இருக்கிறது.

தாத்தா: கண்ணன் சொல்வது சரிதான்

ஸ்ரீராம்: உனது கட்டுரை எழுதி முடிந்ததா கண்ணா?

கண்ணன்: ஓ ... Yes! முடித்துவிட்டேன் தாத்தா பாட்டியின் Wedding album இல் இருந்து நிறைய information கிடைத்தது. நீயும் உன்னுடைய தாத்தா பாட்டியின் கல்யாண album பார். பிறகு இங்கு வரும்போது அதைப்பற்றி நிறையப் பேசலாம். நேரிலே பேசுவதுபோல வராது. நீ கட்டாயம் வரவேண்டும்.

ஸ்ரீராம்: OK கண்ணா I am looking forward to seeing you all Bye கண்ணா

கண்ணன்: ஓம் சந்திப்போம் அடுத்தமுறை தமிழிலேயே பேசவேண்டும். Bye ஸ்ரீராம்.

## திருப்புலம்பல்

**உற்றாரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்**
**கற்றாரை யான்வேண்டேன், கற்பனவும் இனியமையும்**
**குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா!உன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே**

**திருவாசகம் பதிகம் 39**


# Hinduism in search of Answers.......

Compiled by S Atputhananthan


## AT HOME

### Why do Saivaites wear Vibuthi?


This practice dates back to Vedic period, where people used to smear their body with ashes after the conclusion of homa/yagna their principal religious ceremony. Homa (sacrificial fire -offering of oblations into the fire with sacred chants) where special wood along with ghee and other herbs are offered as worship of the Lord, signifying the offering or surrender of the ego and egocentric desires into the flame of knowledge for a noble and selfless cause. Ignorance (oblations) and inertia (wood) are burnt by knowledge (fire). Bhasma (the holy ash) from the homa signifies the purity of the mind which results from such actions. The word bhasma means "that by which our sins are destroyed and the Lord is remembered". Bha implied bhartsanam ("to destroy") and sma implies smaranam ("to remember").



The application of bhasma therefore signifies destruction of the evil and remembrance of the divine. Bhasma is called vibhuti (which means "glory") as it gives glory to one who applies it and raksha (which means a source of protection) as it protects the wearer from ill health and evil by purifying him or her. Vibhuti or Bhasma is ash. Anything-burnt turns into ash. Ash when burnt remains ash. Thus it symbolises the eternal, changeless factor. Also, it shows that everything in this world is transient and temporary by nature. The ash we apply indicates that we should burn false identification with the body and become free of the limitations of birth and death and become eternal (birthless). It is made by burning cow dung which is impure (Malam in Tamil). Hence, when impurities are burnt away by knowledge and Grace, what remains is the changeless, pure Atman. Wearing Vibhuti symbolises and reminds us this fact.



Bhasma is specially associated with Lord Shiva who applies it all over His body. Shiva devotees apply bhasma as a tripundra (the form of "≡"). When applied with a red spot at the centre, the mark symbolises Shiva-Shakti (the unity of energy and matter that creates the entire seen and unseen universe).



The application of Vibhuti protects against skin ailments especially resulting from sweat. It also maintains the body temperature on a steady note. Ayurvedic scriptures state the benefits of Vibhuti – It purifies the blood and regulates the blood pressure. The digestive system becomes more active as Vibhuti retains the heat in the body itself by clogging its escape routes. In traditional ho,e remedies, Vibhuti is applied when a person is shivering due to fever, etc. It also helps develop resistance to cold.


. The Upanishads say that the famous Mrityunjaya mantra should be chanted whilst applying ash on the forehead.

"Om Tryambakam yajaamahe Sugandhim pushtivardhanam
Urvaa rukamiva bhandhanaan Mrytyor muksheeyamaa amrutaat"
"We worship the three-eyed Lord.Shiva who nourishes and spread fragrance in our lives. May He free us from the shackles of sorrow, change and death – effortlessly, like the fall of a ripe large Cucumber from its stem."
- Swami Chinmayananda

Arumuga Navalar, in his Saiva Vina Vidai (Questions and Answers on Saivism), says the way to apply 'Viputhy' is to look up and take the viputhy in the middle three fingers of the right hand and spread it on the forehead, saying "Siva, Siva". Siva is the abridged form of the Mantra **SiVa**YaNaMa.

Lord Krishna says in Gita, "Just like wood is turned into ashes by fire, Gnana-Agni burns all the Karma and turns into ashes". This is the ultimate state. The ashes-Vhibuthi signifies / symbolises that state of Gnana – once the Karma is turned to ashes..
Vaishnavites wear the soil under the Thulasi' tree to remind us that We who are born on the earth eventually end to that sand on death. Be it an emperor or a poor peasant every one ends into ashes and then under the soil. The wearing of the Vhibuthi/Thiruman both signify / remind us this state, and enable us to lead a humble life.
Tripundra personifies Prana (Life) and indicates the three activities of God. Creation, Sustenance and Destruction. Tilak is a mark of auspiciousness. It is put on the forehead with sandal paste, sacred ashes or Kumkum.

**Why do we not touch papers, books and money with the feet?**
To Indians, knowledge is sacred and divine. So it must be given respect at all times. Nowadays we separate subjects as sacred and secular. But in ancient India every subject – academic or spiritual – was considered divine and taught by the guru in the gurukula. The custom of not stepping on educational tools is a



frequent reminder of the high position accorded to knowledge in Indian culture. From an early age, this wisdom fosters in us a deep reverence for books and education. This is also the reason why we worship books, vehicles and instruments once a year on Saraswathi Pooja or Ayutha Pooja day, dedicated to the Goddess of Learning. In fact, each day before starting our studies, we should pray:



**Saraswati namasthubhyam    Varade kaama roopini**
**Vidyaarambham karishyaami  Sidhirbhavatu me sadaa**
**"O Goddess Saraswati,**
**the giver of Boons and fulfiller of wishes,**
**I prostrate to You before Starting my studies.**
**May You always fulfill me".**
Swami Chinmayananda

The same principle applies for money which we consider as valuable and therefore sacred.



**Why is to touch another, with the feet is considered an act of misdemeanour?**
Man is regarded as the most beautiful, living breathing temple of the Lord! Therefore touching another with the feet is akin to disrespecting the divinity within him or her. This calls for an immediate apology, which is offered with reverence and humility.
- Swami Chinmayananda


## Why do we offer food to the Lord before eating it?



Indians make an offering of food to the Lord and later partake of it as prasaada – a holy gift from the Lord. In our daily ritualistic worship (pooja) too we offer naivedyam (food) to the Lord

. The Lord is omnipotent and omniscient. Man is a part, while the Lord is the totality. All that we do is by His strength and knowledge alone. Hence what we receive in life as a result of our actions is really His alone. We acknowledge this through the act of offering food to Him. Thereafter it is akin to His gift to us, graced by His divine touch. Knowing this, our entire attitude to food and the act of eating changes. The food offered will naturally be pure and the best. We share what we get with others before consuming it. We do not demand, complain or criticise the quality of the food we get. We eat it with cheerful acceptance (prasaada buddhi).

Before we partake of our daily meals we first sprinkle water around the plate as an act of purification. In some traditions, five morsels of food are placed on the side of the plate acknowledging the debt owed by us to the Divine forces (devta runa) for their benign grace and protection; our ancestors (pitru runa) for giving us their lineage and a family culture; the sages (rishi runa) as our religion and culture have been "realised", maintained and handed down to us by them; our fellow beings (manushya runa) who constitute society without the support of which we could not live as we do and other living beings (bhuta runa) for serving us selflessly.



After offering the food thus, it is eaten as prasaada – blessed food.

**Swami Chinmayananda**

# Thirukural Stories



# திருக்குறள் கதைகள்

**திருமதி சாவித்திரி ஆனந்தன்**
***Mrs Savithiri Anandan***

# வலியறிதல்

## அதிகாரம் 48 குறள் : 271
## Chapter: 48 verse 271

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்**

செயலின் வலிமையும், த்னது வலிமையும், பகைவனுடைய வலிமையும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

Let (one) weigh well the strength of the deed (he purposes to do), his own strength, the strength of his enemy, and the strenght of his allies (of both), and then let him act.

இராவணனால் சிறைபிடிக்கப்பட்ட சீதையை மீட்பதற்காக இராமபிரான் இலங்கைக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே, கடல் நடுவே பாலம் அமைக்க அவர் ஆயத்தமானார். ஆனால் ஓயாமல் பொங்கியெழுகின்ற அலைகளின்மேல் பாலம் அமைப்பதென்பது மிகவும் கடினமானதொரு பணி. அலைகளை ஓய்ந்திருக்கச் செய்யும்படி இராமர் கடலரசனை வணங்கி வேண்டுதல் செய்தார். வருண பகவானிடமிருந்து பதில் வரத் தாமதமாகியதால் கோபம் கொண்ட இராமர், அவரோடு சண்டை செய்யம் பொருட்டுத் தன் வில்லில் அம்பைத் தொடுத்தார். உடனே வருண பகவான் இராமர் முன்பு தோன்றி, தாமதத்திற்கு மன்னிப்புக்கோரி அலைகளை ஓய்ந்திருக்கும்படி செய்தார்.

வானரச் சேனைகள் பாலம் கட்டும் பணியைத் தொடங்கின. அநுமனுடைய தலைமையில் அவை பெரிய பெரிய பாறைகளைக் கொண்டு வந்து கடலில் போட்டன. ஆனால் அவை யாவும் நீருக்குள் மூழ்கி அமிழ்ந்து போயின. இதன் காரணமாகப் பாலம் கட்டும் பணி தாமதமடைந்தது. அதன் பிறகு இராமரின் கட்டளைப்படி, கொண்டு வரப்பட்ட பாறைகள் யாவும் நளன் என்ற வானரத்திடம் கையளிக்கப்பட்டன. வலது கையால் வாங்கிய பாறைகளை நளன் தனது இடது கையால் கடலுக்குள் போட்டபோது, ஆச்சரியப்படும் விதமாக அவை யாவும் நீரின் மேல் மிதந்தன. பாலம் கட்டும் பணியும் துரிதமடைந்தது.

இவ்வாறு, பணி தொடர்ந்து கொண்டிருந்தபோது, நளன் வீசிய பாறைகள் மட்டும் நீரில் மிதந்ததை அவதானித்த இலக்குமணர், ஆச்சரியம் மேலிட இதற்கான காரணம் என்ன என்று இராமபிரானிடம் கேட்டார். இராமர் கூறிய காரணம் பின்வருமாறு:-

"ஒரு சூரிய கிரகண நாளிலே, தோஷங்கள் கழிவதற்காக மாதவேந்தர் என்ற ஞானி நீரில் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தார். அப்போது சிறிய வானரக் குட்டியாக இருந்த நளன் அவ்விடம் வந்து அதைக் கண்டபோது மகிழ்ச்சியடைந்தான். குறும்புத்தனம் நிறைந்த பழக்கத்தால் அந்தக் குரங்கு கற்களைப் பொறுக்கித் தண்ணீருக்குள் எறிந்தது. அதனால் ஏற்பட்ட சத்தமும், தெறித்து எழுந்த நீரும் மாதவேந்தர் மந்திரம் சொல்லத் தடையாய் இருந்தன. நளனைத் துரத்த முயன்றும் முடியாமல் போயிற்று. சாபமிடுதல் மந்திரத்தின் பலனைக் குறைக்குமென்பதால், 'நீரில் எறிகின்ற கற்கள் எல்லாம் நீருக்குள் கீழே போகாமல் மிதக்கக்கடவது' என்று சொன்னார். அதன் பிறகு நளன் எறிகின்ற கற்கள் எதுவும் நீரில் அமிழாமல் மேலே மிதந்தன.

பாலம் கட்டும் பணிக்கு இராமர் நளனைத் தேர்ந்தெடுத்த காரணத்தை இலக்குமணர் புரிந்து கொண்டார்.

Rama had to go to Lanka to rescue Sita who was abucted by Ravana. So, he wanted to build a bridge across the sea to reach Lanka where Sita had been imprisoned. But it was a difficult task to build a bridge across the sea on the giant waves. Rama prayed the king of sea to make the waves still without moving until the bridge was built. It got late for an answer to come from Varuna, Rama got angry and set the arrow to fight with Varuna. Suddenly Varuna appeared in front of Rama to make an apology for the delay and made the waves to remain still.

The battalion of monkeys started to build the bridge by bringing huge rocks under the leadership of Hanuman. But every time when the rocks were put into the sea, they drowned in the water and disappeared. Due to this, the task of buiding the bridge got delayed. Then according to the Rama's order. the monkey named Nalan took the leadership and the rocks brought by the monkeys were handed over to Nalan. Nalan received the rocks in his right hand and threw them with his left hand. For everyone's surprise, the rocks thrown by Nalan were floating on the sea thereby quickening the task of building the bridge.


When the task was continuing like this, Laksmana who noticed that the rocks thrown by Nalan only floated and then those thrown by other monkeys did not. Surprised by this, he asked Rama, the reason for this.

Rama replied as follows:-

" On the day of a Solar eclipse, a sage named Mathavedrar was bathing in the sea to overcome the bad effects due to the eclipse. There came a monkey Nalan. On seeing the sage bathing, it mischievous habit made it to throw some stone into the water, enjoying the sound it made in the water. This sound disturbed the sage, making him unable to chant his mantras properly. He tried to chase Nalan but couldn't.

So, he made the stones thrown by Nalan not to sink and make the noise, instead, made it float. Since that incident, any stone thrown by Nalan started to float in the water without making a sound or getting drowned. From that day, whichever stone thrown by Nalan would only float on the surface of water instead of getting drowned.

Laksmana got to know the reason why Rama chose Nalan to carry out the task of building the bridge across the ocean.


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14 - 04 - 2019 அன்று வெளியிடப்படுகிறது.